1405

Registered. No. M. 878.

5 - MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion
Science, Art and Civilization.,

தொகுதி 8	1917-௵ ஜுலை௴ பிங்கள௵ ஆடி௴	பகுதி 3

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L., F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ௹ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

விஷய அட்டவணை

(CONTENTS.)

பக்கம்

1. தத்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி.ஏ. 81
Current events—R. Rangaswamy Iyer. B. A.

2. துளசிதாஸ் சரித்திரம்—கே. எஸ். இராமசந்திரையர் 89
Life of Tulasidas—K. S. Ramachandrier

3. யுத்தமும் சீர்திருத்தமும்—ஸி. ஜினராஜதாஸர் 95
War & civilization—C. Jinarajadasa

4. மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் எம். ஏ. 104
Meerabai—R. Sreenivasa Aiyer, M. A.

5. பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்குசாமி ஐயர் 110
Elements of Theosophy—V. Venkusamy Iyer

6. விவாஹ வயதை உயர்த்தல்—ஸ்ரீமதி பார்வதியம்மாள் 113
Raising of the age of marriage—Mrs. Chandrasekhara Iyer

7. சமாசாரம்-News 119

8. புத்தகவரவு—Review of Books 94, 103, 112a.

லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வாரதது. பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்த ராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், ஸிட்னீ கன்கார்டியா ஹாலில் ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு முன் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்,

பிரஹ்மக்ஞான மந்திரம்,

மதுரை.

1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும்.

பார்சல்கள் வாங்கும்பொழுது அடியிற்கண்ட விலாசம் சரியாக யிருக்கப்பட்ட லேபிளைப்பார்த்து வாங்குங்கள்.

உலகப்பிரசித்தி பெற்ற சாலாமிசிரி முறப்பா கவர்மெண்டில் ரிஜிஸ்டராயிருக்கிறது.

ஐயா! கனவான்களே! அநேக ஜனங்கள் உபயோகிக்கக்கூடாத மருந்துகளை பலவாறாகப் பிரசுரம்செய்து அநேக ஜனங்களை மோசம் செய்கிறார்கள். எங்கள் மருந்தை அப்படி நம்பமாட்டீர்களென்று ஓர் சந்தேகம் தோன்றுகிறது. ஆகையால் ஒரு தரம் வரவழைத்துப் பரீட்சித்தால் பிறகு தங்களுக்குத் தாங்களே அறிவீர்கள். ஆரோக்கிய பாக்கியத்திற்கும் காரணம் ஆயுசு பலம், தேஜசு முதலானவைகள் உண்டாவதற்கும் மனிதருக்கு ரத்தமே மூலமாயிருக்கிறது. ஆனதால், ஆரோக்கிய பாக்கியமே பாக்யம் என்ற பழமொழிபோல் இரத்தத்தை ஒவ்வொரு மனிதனும் கெட்டுப்போகாமல் சுத்தமாய் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதவசியம். இல்லாவிட்டால் நாலுவிதமான வியாதிகள் உண்டாகி மரணகாலம் பரியந்தம் வியசனத்திற்கு ஆளாக்குகிறது. சாலாமிசிரி என்பது ஓர்வித பழம். அது காபூல்கந்தர், ஆப்கனிஸ்டான் தேசங்களில் ஏராளமாக விளைகிறது. நாம் அந்த சாலாமிசிரியைத் தருவித்து அதில் முறப்பா செய்திருக்கிறோம். சாலாமிசிரி முறப்பாவை மூத்திர சம்பந்தமான அநேக வித வியாதிகளையும் இரத்த சம்பந்தமான அநேக வித வியாதிகளையும், இரத்தம் கெட்டுப்போயிருப்பதையும் கை கால் தலைநோய், இடுப்பு நோய், முதலான வியாதிகளையும் இன்னும் அநேகவித வியாதிகளையும் குணப்படுத்தி தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும். அப்படி கொடுக்கிறதில் யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. தாம்பிர பஸ்பம், வெள்ளி பஸ்பம், தங்க பஸ்பம், இவைகளைக் காட்டிலும் நமது சாலாமிசிரி முறப்பா மிகவும் மேன்மையானது. தரை பற்றோதவும் இம்முறப்பாவுக்கு ஈடாகாது. இம்முறப்பாவில் எவ்விதமான அசுசி பதார்த்தங்கள் சேருகிறதில்லை. மிகவும் மேன்மையான பதார்த்தங்களும் அதிக விலையுயர்ந்த சரக்குகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டு வருகிறது. இம்முறப்பா சாலாமிசிரியால் செய்யப்படவில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும். அப்படி கொடுக்காதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்துகொள்ளலாம்.

டப்பி ஒன்றை உபயோகித்தால் பூரணமாய் சுகத்தைக் கொடுக்கும். 2, 3-டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது.

கிரயம்:—டப்பி 1-க்கு ரூபாய் 2—0—0. போஸ்டேஜ் 1-டப்பி முதல் 3-டப்பி வரையில் அணா 0—6—0. காலணா கார்டில் எழுதினால் உடனே வி. பி மூலமாய் தங்கள் இருப்பிடத்தைத் பார்சல் தேடிக்கொண்டுவரும்படி அனுப்ப தயாராயிருக்கிறோம்.

சாமான்களுக்கு ஆர்டர் செய்பவர்கள் பிழையில்லாமல் தங்கள் விலாசங்களை விபரமாயும் தெளிவாயும் எழுதவும்.

டி. மன்னுலால், டில்லி வைத்தியர்,
நெ. 5 அவினியூ ரோட்டு, பெங்களூர் சிட்டி.

விளம்பரம்

உபாஸிநஸாது ஸ்தோத்திரம்:—(பி. ஆர். சுந்தரராஜ ஐயர்) இது ஓர் அருமையான ஸமஸ்கிருத நூல். தேவதீர்த்தர் என்ற ஆசிரியரால் இயற்றப்பெற்றது. இது பாப்பின் நடை போன்ற பொருள் நயம் பழுக்கப் பிரயோகமாகிய சந்தத்தில் இன்னிசை யான படங்களால் நிரைக்கப்பட்டது. உத்திகளும் அணிகளும் எல்லா வற்றிலும் ஈசுவர விளக்கம் அதிகமாயுள்ள பதார்த்தங்களைப் பற்றிய துதியாக இச்சுலோகங்கள் திகழ்கின்றன. இதில் பதார்த்தங்களுடைய லக்ஷணங்களைப்பற்றி விவரங்களும் சேர்ந்துள்ளன. தமிழ் மொழிபெய ர்ப்பு குறிப்புரைகளோடு வெளியிடப்பட்டது. இதன் விலை 6 அணா

தியானசித்திரம் விஷயம்:—(சே. எஸ். ராமசாஸ்திரியார்) தியா னத்தின் பிரயோஜனமென்னவெனில், பிரதி மனுஷ்யனும் அவ னவன் நினைச்சட்ட படிகளில் ஸத்யத்தையும், தர்மத்தையும் சுத்தத்தையுமே கடைப்பிடிக்கும் திறமையைப் பெறுமாறு, தன்னுள்ள கற்பனைகளை ஒருமுகப்படுத்த மனதைப் பழக்குவதேயாம். அதற்கு இல குவாக "ஸூத்ரங்களில்" என்ற ஆர்ய கிரந்தத்தின் விஷ யங்கள் யாவும் மாதத்திற்கொரு சிந்தனையாகவும், வாரந்தோறும் அப்யஸிக்கத்தக்க ஓரோர் நற்சிந்தனையாகவும், பிரதிதினமும் நமது அனுஷ்டானத்தை சேர்ப்பித்துக்கூடிய ஓரோர் நற்சிந்த னையாகவும் வகுக்கப்பட்டு, தியானசித்திரத்தில் அநுகூலமாய் பிர சுரமாகி யிருக்கின்றன. எல்லோரும் வாங்கிப்படித்து தியானி த்து நற்பயன் பெறுமாறு விலை சொற்பமாக 4 அணா விதம் ஏற்படு த்தப்பட்டிருக்கிறது.

பிரஹ்மஞான மந்திரம் மதுரை

உ

சோதிட விளம்பரம்.

பலதீபிகை:—சோதிடம் பயில இதுவே சிறந்த வழி காட்டி. காலபுருஷ அங்கம்முதல் லததா பலன் வரை விரிவாய் எடுத்து ரைக்க வல்லது. 26 அத்தியாயங்கள் அடங்கிய 236 பக்கங்கள் கொண்டது.

காலிகோ பைண்ட்	ரூ 1—8—0
ராப்பர் ,,	ரூ 1—4—0

சோதிட கண்டம்:—சுதேச விராசிமானமகிரக லக்கின புஸ்த கங்கள் ஆம் இலைகளைகண்டறியும் ஆற்றல் விளக்க வல்லது.

ராப்பர் பைண்ட்	ரூ 0—6—0

புட்பபத்தம்:— மழைகளும் உண்மை பின்மையும் கூறி இவ் வகைப்படயிரா சபைய உண் மேடைகளுங் கூற வல்லது.

ராப்பர் பைண்ட்	ரூ 0—4—0

இப்புத்தகங்களுக்கு வி. பி. செலவு பிரத்தியேகம்.

கு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி
1, ஏகாம்பர ஆச்சாரி வீதி,
பறங்கிப்பேட்டை.

5 - MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8 | 1917-௵ ஜூலை௴ பிங்கள௵ ஆடி௴ | பகுதி 3

தற்கால நிலைமை.

சென்ற சிலகாலமாக, அதாவது நமது பிரஹ்மஞ்ஞான சபையின் அக்கிராசனபதியவர்கள் ராஜரீக முறைகளைச் சீர்திருத்த வேண்டுமெனக்கருதி அவ்விஷயத்தில் தம்முடைய தீவிரதரமான பெருமுயற்சியுடன் தாம் கருதிய சீர்திருத்தங்களை வற்புறுத்தித் தமது பத்திரிகையாகிய நியூ இந்தியா மூலமாகவும், உபந்யாஸங்கள் மூலமாகவும், தாம் தலைவராயிருந்து ஸ்தாபித்த ஸ்வராஜ்ய ஸமாஜங்கள் மூலமாகவும், பிரசுரம் செய்ய ஆரம்பித்தது முதல், அவர்களுடைய அபிப்பிராயங்களும் இராஜாங்கத்தாருடைய அபிப்பிராயங்களும் முரண்பட்டன. செய்வன திருந்தச் செய் என்பது நமது அம்மையவர்கள் முக்கியமாய்க் கைக்கொண்ட நீதி. தாம் எது சரியென்றும், செயற்பாலது என்றும் கருதுகின்றனரோ, அதைச் செவ்வனே, விடாமுயற்சியுடனும், உற்சாகத்துடனும், விரைவில் பலனுக்குக் கொண்டுவரும் மனோபலத்துடனும் செய்வது அவர்களியற்கை. இந்திய இராஜாங்கத்தார் நமது அக்கிராசனரின் அபிப்பிராயங்க

ளேயும் முறைகளேயும் ஒப்பாமல், அவர்களின் முயற்சிகளே திருத்தத் தீர்மானித்தனர். சென்ற மே௴ 24-ஆம் தேதி உதகமண்டலத்தில சட்ட நிரூபண சபையில் பிற்கூற்றாய் மாட்சிமை பொருந்திய மதராஸ் கவர்னர் அவர்கள் செய்த பிரசங்கத்தில் தமது அபிப்பிராயத்துக்கு மாறான பிரயத்தினங்களேயும் முறைகளேயும் தடுப்பதற்குவேண்டிய நிர்ப்பந்த முறைகளே சர்க்காரில் கையாளுவார்கள் என்பது வெளியாயிற்று. எவ்விதமாய் அந்நிர்ப்பந்த முறைகள பிரவிருத்திக்கும் என்றும் யாரை யுத்தேசித்து அவை பிரவிருத்திக்கும் என்றும் சாதாரண ஜனங்களுக்குக்கூடத் தெரிந்தது.

***

ஜூன்௴ 18-ஆம் தேதியன்று ஸ்ரீமான் வாடியா ஸ்ரீமான் அருண்டேல் இவர்களுக்கு சர்க்காரிலிருந்து உத்தரவு வந்தது. அப்பால் மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் கோரிக்கைப்படி ஸ்ரீபெஸண்டு அம்மையவர்கள், அவர்களேச் சந்தித்தார்கள். அச்சந்திப்பினாலும் யாதொன்றும் பயன்படவில்லை. அன்றே மாதஸ்ரீ பெஸண்டம்மையவர்களுக்கும் சர்க்கார் உத்தரவு ஸாதாரயிற்று. மூன்று உத்தரவுகளிலும என்ன சொல்லியிருந்தது? (1) மூவரும் ஜனங்களுடைய சந்திப்புகளுக்குப் போகக்கூடாது. சந்திப்புகள் விஷயமாய் யாதொரு சம்பந்தமும் வைத்துக் கொள்ளவும் கூடாது. (2) அவர்கள் செய்த பிரசங்கத்தையாவது அல்லது எழுதிய வியாசத்தையாவது பிரசுரிக்கக்கூடாது. பிரசுரிக்கும்படி செய்யவும் கூடாது. (3) அவர்கள் எழுதும் கடிதங்களும் அவர்களுக்கு வரும் கடிதங்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள பார்வையின் பேரில் தான் அனுப்பப்படும். (4) குறிப்பிட்ட சிலகாலத்துக்குப் பிறகு அவர்கள் சென்னை நகரிலாவது செங்கற்பட்டு ஜில்லாவிலாவது வசிக்கக்கூடாது. ஆனால் அடியில் கண்ட இடங்களில் ஒன்றில் வசிக்கவேண்டும். அதாவது:—நீலகிரி, கோயம்புத்தூர், பல்லாரி ஜில்லாக்கள், பழனி, சோவராய

மலைகள், விசாகப்பட்டணம் முனிசிபாலிட்டி. இவ்வுத்தரவுகளை யனுசரித்து 21-ஆம் தேதி அம்மையவர்களும், 22-ஆம் தேதி மற்ற இருவரும், உதகமண்டலத்தில் பிரம்மஞானசபை பிரதம அக்கிராசனர் கர்னல் ஆல்காட் அவர்கள் வாங்கியிருந்த 'குலிஸ்தான'த்தில் வசிக்கச்சென்றார்கள்

*
* *

நமது பிரசிடெண்டவர்கள் 21-ஆம் தேதியன்று இரவில் சென்னை 'ஸெண்ட்ரல் ஸ்டேஷனை' விட்டு நீலகிரிபோகும் வண்டியில் புறப்பட்டபொழுது கண்மாரிபோல் விண்மாரி பொழிந்து கொண்டிருந்தும், சென்னையிலுள்ள முக்கியஸ்தரனைவரும் ஏனையோரும் ஒருங்கு சேர்ந்து, அம்மையவர்களை வழியனுப்ப வந்திருந்ததும், ஒரு சிறு பெண்குழந்தை முதன்முதல் அம்மையவர்கள் கழுத்தில் ஆரமிட்டது முதல் ஆரங்கள் மலைபோற் குவிந்ததும், ஜனங்களுடைய அபிமானத்தையும் பகுமானத்தையும விசுவாசத்தையும், அம்மையவர்கள் எவ்வாறு கொள்ளைகொண்டு சென்றனர் என்பதைத் தெற்றெனவிளக்கிற்று.

*
* *

ஒரு நிமிஷ நேரத்தையும் விருதாவாய்க் கழிக்காமல், அநேகர் செய்யக்கூடிய வேலையை ஒருவராய்ச்சிறிது நேரத்திற் செய்துகொண்டு, ஒரு தினசரிப்பத்திரிகை, ஒரு வாரப்பத்திரிகை, அநேகம் மாதப்பத்திரிகைகள் இவைகளையும் நடத்திக்கொண்டு, அடையாற்றிலுள்ள ஏராளமான அலுவல்களைப் பார்த்துக்கொண்டு, கோரிய இடமெல்லாம் பிரசங்கங்கள் செய்துகொண்டு, 71 ஆம் பிராயத்தில் ஆச்சரியப படும்படியான தேகவலிமையையும் மனோவன்மையையும் கொண்டு, உழைத்துவரும் இவ்வம்மணிக்கு, தன்னந்தனியாய், பிரசங்கங்கள் செய்யாமலும் வியாசங்கள் எழுதாமலும், புத்தகங்கள் பிரசுரிக்காமலும், சும்மாவிருக்க வேண்டும் என்று ஆக்ஞாபிப்பதைவிடப் பெரிய நிர்ப்பந்தம் யாதுளது? ஆனால் சுயப் பிரயோஜனத்தைக் கருதாது, கடமையென்று கருமத்தை முடிப்பார்க்கு, ஈசுவர சங்கற்

பம் என்று அவர் பேரில் பாரத்தைப் போட்டு, வந்தது வரட்டும் என்று, மனச் சாந்தியும் உறுதியும் பூண்டிருத்தல் அல்லவோ இயற்கை? அன்றிரவு வந்திருந்த ஒவ்வொருவருக்கும் புன்னகையுடன் மறுமொழி யளித்து விடை பெற்றுச் சென்றதைப் பார்த்து சிற்றறிவுள்ள சாமனிய ஜனங்கள் யாவரும் வியப்படைந்தார்கள்.

*
* *

நமது பிரசிடெண்டவர்கள் நியாய விரோதமாகவாவது சட்ட விரோதமாகவாவது யாதொரு காரியத்தையும் செய்தது கிடையாது. இளம்பிராயத்தில் இங்கிலாந்தில் அதிதீவிரமாக பொது ஜனங்களுக்காக உழைத்து வரும் காலத்திலும் கூட அதிகாரிகளுடைய நடபடிக்கைகள் பிசகு என்று ஆக்ஷேபித்தாலும் கூட அதிகாரிகளுடைய சட்ட சம்மதமான உத்தரவை மீறினது கிடையாது. இப்பொழுதும் சகல நடபடிக்கைகளும் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்தே நடப்பது தான் சரியென்ற கொள்கையை யுடையவர். அத்தகைய உத்தமியை இவ்வித நிர்ப்பந்தத்துக்குட் படுத்தியதைச் சகிக்காமல் இந்தியா முழுதும், பிரலாபித்து வருகிறது.

*
* *

அம்மையவர்கள் நடத்தி வந்த நியூ இந்தியா தினசரிப் பத்திரிகையை, பம்பாய் லேட் ஹைகோர்ட் ஜட்ஜு காசிநாத திரயம்பக டிலங் என்ற மகானுடைய புத்திரனும், அம்மையவர்களுடைய ஆப்த சிஷ்யரில் ஒருவருமான ஸ்ரீமான் பண்டரிநாத காசிநாத டிலங் என்பவர் இதுவரை வந்ததுபோலவே நடத்திவர முன் வந்திருக்கிறார். அம்மாதிரியே வாரப் பத்திரிகையையும் நடத்திவர வேறு ஒருவர் ஏற்றுக்கொண்டார். பிரஹமக்ஞான மாதாந்தரப் பத்திரிகைகளை ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். அம்மையவர்கள் சென்னையை விட்டுப் புறப்படுமுன் இவ்வேற்பாடுகள் செய்ய முடிந்தது, அவர்கட்கும் மற்றவர்கட்கும் திருப்தியை விளைத்தது. ஜூலை மாதத்து தியாசபிஸ்டு என்ற முக்கிய மாதாந்தர பிரஹமக்ஞானப் பிரசு

சத்தில் ஸ்ரீமான் அருண்டேல் மாது ஸ்ரீ பெஸண்டு அம்மை இருவர்களால் எழுதப் பெற்றிருந்த இரண்டு உயர்ந்த வியாசங்கள் அச்சிடப்பட்டிருந்தன. சர்க்காரவர்களால் செய்யப்பட்ட மேற்கண்ட உத்தரவை அனுசரித்து, முற்கூறப்பட்ட இரண்டு வியாசங்களையும் சத்தரித்து விட வேண்டியிருந்தது. அதைப் பார்க்க நம்மனம் மிகவும் வருந்துகிறது.

* * *

இராஜரீக விஷயமாய் அம்மையவர்களுடைய முயற்சிகளைத் தடுக்கப் போதுமான காரணங்களிருந்தனவா வென்று விசாரிக்க இது இடமும் இல்லை. அந்த விசாரணை செய்ய நாம் முயலவும் இல்லை. ஆனால் அம்மையவர்கள் தம் விஷயமாயும், பிரஹ்மஞான விஷயமாயும், ஆசார சீர்திருத்த விஷயமாயும் கூட யாதொரு முயற்சியும் செய்யக்கூடாதென்று நிர்ப்பந்தித்ததைப் பற்றி நம்முடைய ஆராத துயரத்தையும் உறுதியான ஆக்ஷேபணைகளையும் வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டுள்ளோம். அம்மையவர்களாவது நிர்ப்பந்திக்கப்பட்ட மற்ற இரு பிரஹ்மஞான சபை அங்கத்தினராவது ஏற்கனவே இயற்றிய நூல்களையும் துண்டுப் பத்திரிகைகளையும் கூட விற்கக்கூடாது என்று உத்தர விட்டதைப் பற்றி யார் மனம் தான் சகிக்கும்? அம்மையவர்களுக்குத் திரவிய வருவாயானது புத்தக விற்பனையினால் தானே? அதையும் கூடாதென்று தடுத்தால் எங்ஙனம் செலவுக்குத் தக்க வருவாய் தேடுவது? பட்டினியாய்க் கிடப்பதா? அல்லது நம்மை நிர்ப்பந்தித்த சர்க்காரிடமிருந்து சாப்பாட்டுச் செலவுக்குப் போதுமான ரூபாயைக் கொடுக்கும்படி கேட்பதா?

* * *

இந்தியருடைய, அதிலும் பிரஹ்மஞான சபை அங்கத்தினருடைய, கடமை விபக்தமாயிருக்கிறது. இந்தியர்களுக்குப் பல குறைகளிருக்கலாம். ஆனால் செய்ந்நன்றி

மறத்தல் என்ற அபவாதத்திற்கு அவர்கள் ஒருக்காலும் பாத்திரமாக மாட்டார்கள். நம்முடைய நன்றியறிதலுக்குச் சான்றாக நன்கொடையாக 'பெஸண்டு நிதி' யென்று சென்னையில் ஸ்தாபிக்கப்பட்ட நிதிக்கு நம்மால் கூடிய பொருளைத் தந்துதவலாம். அதினின்று மூவர்களுடைய செலவுக்கும் அவர்களை விடுவித்தற்குச் செய்யும் முயற்சிகளுக்காக வேண்டிய செலவுக்கும் திரவியத்தை யெடுத்துபயோகிப்பார்கள். இதுகாறும் பற்பல கிராமங்களிலும் நகரங்களிலும் பலர் இந்நிதிக்குத் தங்களாலியன்ற பணத்தை யளித்திருக்கிறார்கள். நாம் எல்லோரும் இம் மூவரிடமிருந்து அடைந்திருக்கும் லாபங்களை நன்றாய்ச் சிந்தித்து நம்முடைய கடமையையும் சிந்தித்து, ஒரு சிறு கைம்மாறாக இந்நிதிக்கு வேண்டிய திரவியத்தை யனுப்பி நம்மை கிருதார்த்தர்களாக் குவோமாக. சென்னை ஒய். எம். ஐ. ஏ. கட்டடத்தில் ஏ. ரெங்கனாத முதலியார் அவர்கள் தான் இந்நிதிக்கு காரியதரிசி. அவர்களுக்குப் பணம் அனுப்பலாம்.

*
* *

ஆசியா கண்டத்து ஆஸ்தான கவியென்று புகழ் பெற்றவரும் நிகரற்ற கவிசாதுர்யத்தால் உலகெங்கும் போற்றப் பெற்றவரும், சின்னாட்குமுன் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளில் உபந்யாசங்கள் செய்து அத்தேசத்தாருடைய கௌரவத்தையும் நன்மதிப்பையும் கொணர்ந்து வந்தவரும், உலகெல்லாம் சுற்றிவந்தும், நம்முடைய தந் நாட்டிற்குச் சமானமென்றும் இல்லையெனத் துணிவுற்றவருமான டாக்டர் ஸர் ரவீந்திரநாத டாகோரவர்கள், நமது அம்மையவர்களைப் போற்றியும் மெச்சியும் எழுதியுள்ள நிருபத்தைப் பார்க்க மிகவும் திருப்தியடைந்தோம்.

*
* *

மூவர்கள் இயற்றியுள்ள ஒரு புத்தகத்தையாவது துண்டுப் பத்திரிகையையாவது விற்பனை செய்யக்கூடாது என்று செய்திருந்த உத்தரவை மாற்றி "பிரஹ்மக்ஞான

விஷயமாயாவது மத விஷயமாயாவது மட்டும் எழுதப்பட்ட வியாசங்கள் புத்தகங்கள் அல்லது பிரசங்கத் தொடர்களை சர்க்கார் பார்வையிட்டு, பிரசுரிக்கலாம் என்று அனுமதி கொடுத்தால் அவைகளை விற்பனை செய்யலாம்’ என்று சர்க்கார் மறு உத்தரவு ஒன்று பத்திரிகைகளில் வெளி வந்துள்ளது. புத்தகங்களை வெளியிடலாமா என்று அனுமதி கேட்டு அப்பால் அனுமதி பெற்று பிரசுரிக்கப் போகிறார்களோ அறியோம். ஆனால் முன் செய்த உத்தரவை ஒரு பாக மட்டிலாவது மாற்ற மனமுவந்த மாட்சிமை தங்கிய கவர்னரவர்கள் இந்தியா முழுதும் ஒருமித்து வருந்திச் செய்யும் பிரார்த்தனைக்கு இணங்கி மற்ற பாகங்களையும் மாற்றப் பெரிய மனது செய்து இந்தியரின் விசுவாசத்தையும், வந்தனத்தையும் பெறுவார்களாக என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோம்.

* * *

சென்ற ஜூன் மீ 30-ஆம் தேதி மாலையில் இந்திய தேசாபிமானிகளில் சிறந்தவரும், அவர்கட்கெல்லாம் பிதாமகர் போன்றவருமான தாதாபாய் நௌரோஜியவர்கள் சென்ற 92 வருஷகாலமாய்த் தரித்திருந்த உடலை நீத்தார். தேசத்தின் க்ஷேமத்துக்காகச் சென்ற 70 வருஷகாலமாக இடைவிடாது, மனச்சோர்வடையாது, விடாமுயற்சியுடன் உழைத்து வந்ததும், நீண்ட வாழ்நாள் முழுதும் மாசற்ற நன்னாளாய்க் கழித்ததும், யாரைக் கடுமையாய்க் கண்டித்துப் பேசினரோ அவர்களாலே கௌரவத்துடனும், மரியாதையுடனும் போற்றப்பட்டு வந்ததும், வயதின் மிக்காராயினும், ஹிருதயத்தின் சுறுசுறுப்பிலும், தம் நாட்டுக்குச் சீக்கிரம் நற்காலம் பிறக்கும் என்ற நன்னம்பிக்கையிலும் இளைஞராயிருந்ததும், இவை யெல்லாம் இம்மஹானுடைய பிரிவை இந்தியரனைவரும் தாங்காமல் வருந்தும்படி செய்கின்றன. அவர்களிறந்த மறுதினம் அவர்களுடைய மதசகோட்பாட்டின்படி களேபரத்தைப் பருந்துகளுக்கு இரையாக்க மௌன கோபுரத்துக்குக் கொண்டு

போம்பொழுது 70,000 ஜனங்கள், அதாவது மதுரையின் ஜனத்தொகையில் பாதிப்பேர், கூடச்சென்றார்கள் என்றால் அக்கூட்டம் எத்தனை பெரியது என்றும் ஜனங்களால் அவர்கள் எவ்வளவு நன்கு மதிக்கப் பெற்றிருந்தார்கள் என்பதையும் நாம் ஒருவாறு ஊகிக்கலாம். மாட்சிமை தங்கிய பம்பாய் கவர்னரவர்கள் தாம் மிகவும் விசனிப்பதாகவும், காலத்தில் தமக்குத் தெரிந்திருந்தால் துக்கம் விசாரிக்கவும் பிரேதத்துடன் மௌன கோபுரத்துக்குத் தொடர்ந்து செல்லவும் ஒரு பிரதிநிதியை அனுப்பியிருக்கலாம் என்றும் தெரிவித்தார்கள். லண்டன்மா நகரிலுள்ள இந்தியா மந்திரியும் தம் வருத்தத்தை சமுத்திரத் தந்தி மூலமறிவித்தார்கள். பார்ஸிகளுக்கெல்லாம் குருவானவர் இறந்து போன நௌரோஜியவர்களைப் பற்றி வியந்து பேசி பார்ஸி ரிஷிகளில் ஒருவராய் அவரை இனிக் கொண்டாடவேண்டும் என்று சொன்னார். இவ்வாறு உலகெல்லாம் புகழ்பெற்ற உத்தமன் இறந்ததால் நம்மாதிரு பூமியானது மூத்தகுமாரனை யிழந்ததாகவேயாம் சொல்வோம். ஆனால் அவர் கிழண்டு போன பலமற்ற ஸ்தூல சரீரத்தை நீத்தாரே யொழிய, அவருடைய அன்பும் அபிமானமும் நீங்காமல் இந்தியாவைப் பாதுகாத்துக் கொண்டேயிருக்கும் என்றும் அவர்கள் இந்தியாவின் முன்னேற்றத்தை ஆவலுடன் எதிர்பார்த்து அதற்கு வேண்டிய முயற்சிகளை மேலுலகத்தினின்று செய்து கொண்டிருப்பார்களென்றும் நாம் உறுதியாய் நம்புகிறோம்.

*
* *

சென்ற மாதச் சஞ்சிகையில் ராஜபாளையத்தில் நடப்பதாகச் சொல்லியிருந்த சந்திப்பானது அக்கிராசனர்கள் வரமுடியாத சில அசந்தர்ப்பங்களால் நடைபெறவில்லை.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்

துளசிதாஸ் சரித்திரம்.

துளசிதாஸ் என்பவர் வட இந்தியாவில் 1533-ஆம் வருஷத்தில் ஒரு பிராமண குலத்தில் பிறந்தவர். இவர் மூல நக்ஷத்திரத்தில் பிறந்தவரானதால், அதனால் தங்களுக்கு ஏதோ கெடுதி நேரிடுமென்று பயந்து இவர் தாய் தந்தையர் இவர் சிசுவாயிருக்கையிலேயே இவரை சம்ரக்ஷணை செய்யாமல் கைவிட்டு விட்டார்கள். அப்பால் நரசிம்ம தாஸ் என்ற பெரியவர் ஒருவர் இவரை எடுத்து வளர்த்து வந்தார்.

பெற்றோர்கள் கைவிட்டாலும் ஈசுவரன் கைவிடாமல் குழந்தைகளை ஆதரிக்க வேறுமனிதர்களை ஏற்பாடு செய்வாரென்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தம். திருவள்ளுவ நாயனார், ஔவையார் இவர்களும் இவ்விதம் பெற்றோர்களால் கைவிடப்பட்டு வேறு மனிதர்களால் பாலியத்தில் காப்பாற்றப்பட்டார்கள் என்ற விஷயம் இவ்விடத்தில் கவனிக்கத் தக்கது.

துளசிதாசருக்கு வேண்டிய படிப்பை அப்பெரியவர் கற்றுக்கொடுத்து இராமாயணத்தையும் உபதேசம் செய்தார். அப்பால் துளசிதாஸர் ஒரு அழகான ஸ்திரீயை விவாகம் செய்து கிருஹஸ்தாசிரமத்தில் அமர்ந்தார். அம் மனைவியின் முக அழகைப்பார்த்து எப்பொழுதும் ஆனந்தபபட்டுக் கொண்டிருப்பார். அந்த அம்மணியை விட்டுப் பிரிய இஷ்டமில்லாமலிருந்தார். அநேகம் தடவைகளில் அந்தம்மாளின் தாயார் தகப்பனார்கள் ஆள்விட்டு தங்கள் மகளை தங்கள் வீட்டுக்கு அழைத்து வரும்படியாகச் சொல்லியனுப்பியும் துளசிதாஸ் அவ்வம்மணியை அனுப்பாமலிருந்து விட்டார்.

கடைசியாக ஒரு தடவை இவர் மைத்துனன் வந்து கூப்பிட அவர் அனுப்பமாட்டேனென்று சொல்லி விட்டார். இவர் கடைக்குப்போன சந்தர்ப்பம் பார்த்து மைத்

துனர் தன் சகோதரியை தன் ஊருக்குக் கூட்டிப்போனார். துளசிதாஸ் கடையிலிருந்து தன் வீட்டிற்கு வந்துபார்க்கத் தன் மனைவியைக் காணாமல் நிரம்பவும் கிலேசப்பட்டார். பக்கத்து வீட்டுக்காரர்கள் இவருடைய கிலேசத்தின் காரணத்தைத் தெரிந்து அவர் மனைவியை அவர் மைத்துனன் ஊருக்குக் கூட்டிக்கொண்டு போனதாகச் சொல்லவும், அந்த ஊருக்குப் போனார். வழியில் நிரம்பவும் கஷ்டப் பட்டு கடைசியில் மனைவியின் பிறந்த அகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

மாமனார் கிருஹம் போய் தன் மனைவியைக் கண்டார், அந்த மாதுசிரோமணி இவரைக் காணவும் வெட்கி. "இந்த மாமிசப் பிண்டமாகிய சரீரத்தின் மேல் வைத்திருக்கும் அன்பை ஸ்ரீபகவான் ராமசந்திர மூர்த்தியிடம் செலுத்தி அவரை பஜித்தால் எவ்வளவோ மேன்மை பெறலாமே" என்று தன்கணவனைப் பார்த்துக் கடிந்து சொல்ல துளசிதாஸருடைய மனது உருகி உடனே கிருகத்தைவிட்டுப் புறப்பட்டு காசிப்பட்டணம் சென்றார்.

அவ்விடத்தில் காசிவிசுவநாதரை தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீராமரை ஸ்தோத்திரம் செய்து வந்தார். அப்பால், தெய்வகிருபையால் சித்திரகூடத்துக்குப்போய் சிரஞ்சீவியாகிய ஆஞ்சநேயரான ஹனுமாரைப் பார்த்து அவரால் உபதேசம் பெற்றார். வால்மீகி ரிஷியே கலியுகத்தில் ஸ்ரீராம சரித்திரம் பாடவேண்டி, துளசிதாசராக அவதாரம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. அது விஷயம் எப்படியிருந்தாலும் இவருக்கு ஸ்ரீ இராமனிடம் அத்யந்த பக்தி யேற்பட்டிருந்ததென்பது இவருடைய அநேகம் கிரந்தங்களால் வெளியாகிறது. அடியிற்கண்ட கிரந்தங்கள் இவரால் இயற்றப்பட்டதாக வெளியாகிறது.—ஹிந்திபாஷையில் அவை எழுதப்பட்டவை. அவையாவன:—ராமாயணம், ராமகீதாவளி, தோஹாவளி, கபித்சம்பந்த, பினேபத்திரிகா, ஸத்ஸை, ராம் ஐக்ய,

இவர் செய்த அற்புதங்கள்.

ஒரு காலத்தில் ஒரு பிராமணன் கொலைக்குற்றம் செய்தவன் இவரிடம் வந்தான். இவர் அந்தப் பிராமணனை ஸ்ரீராமபஜனை செய்யச்சொன்னார். அவன் அந்தப்படி செய்தான். தாசர் அவனைப்பார்த்து "உன்பாபம் நீங்கி விட்டது" என்று சொல்லி அவனுடன் கூடவிருந்து சாப்பிட்டார். மற்ற பிராமணர்கள் இதை சகிக்காமல் துளசிதாசரை உபேக்ஷை செய்ய ஆரம்பித்தார்கள். தங்கள் கிட்ட அவரை அணுகவொட்டாமலும் செய்தார்கள். தங்கள் கோஷ்டியில் சேரவேண்டுமானால் காசிவிசுவநாதர் சன்னிதியிலிருக்கும் நந்திகேசுவரர் துளசிதாசர் கொடுக்கும் ஆகாரத்தைச் சாப்பிடும்படி அன்னவர் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். தாசர் அவ்விதமே செய்து அவர்களைத் திருப்தி செய்தார்.

இவ்விடத்தில் திருவிசைநல்லூர் ஐயர் அவர்கள் சரித்திரமும் கவனிக்கத்தக்கது. ஐயர் அவர்கள் தந்தகப்பனார் சிராத்ததினத்தில் பிராமணர்களுக்கென்று சமைத்து வைத்திருந்த அன்னத்தைப் பசியுடன் வருந்தி வந்த ஒரு சண்டாளனுக்குப்போட்ட நிமித்தம் ஒருவரும் அவர் வீட்டுக்கு பிராமணார்த்தத்துக்குப் போகமாட்டேனென்றுசொல்ல, அக்கிராமத்துப் பிராமணர்களை திருப்தி செய்ய தன் வீட்டின் பின்பக்கத்தில் கங்கையைத் தருவித்து ஸ்நானம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இதை வருஷம் ஒரு தடவை திருவிழாவாக அவ்விடத்தில் கொண்டாடுகிறார்கள்.

ஒருநாள் இரவு தாசருடைய சொத்துக்களை திருடுவதற்காக சில திருடர்கள் இவர் வீட்டையடைய ஒரு இருண்ட மேகவர்ணமுள்ள ரூபம் தன் கையில் உள்ள வில்லை நாணிட்டு அம்பு எய்வதுபோல் அவர்கள் திருஷ்டிக்குத்தோன்ற அவர்கள் பயப்பட்டு அவ்வீட்டை சுற்றிச் சுற்றி வந்தார்கள். இவர்கள் போனவிடமெல்லாம் அந்த

ரூபம் இவர்களை விடாமல் தொடர்ந்தது. விடிந்த பிறகு இவர்கள் துளசிதாசரைப் பார்த்து "ஐயா இந்தக் கருத்த வர்ணமுடையவாலிபர் யார்" என்று கேட்டார்கள். இதைக் கேட்ட தாசர் கொஞ்சநேரம் மௌனமாகவிருந்து அப்பால் கண்களில் கண்ணீர் விட்டு அழுதார். பகவான் ஸ்ரீராமர்தான் தன் சொத்துக்கு காவலாளியாக வந்தவரென்று உணர்ந்தார். திருடர்கள் அபேக்ஷித்து வந்த பொருளையும் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களுக்கு உபதேசம் செய்து அவர்கள் ஹிருதயத்தைச் சுத்தியாய் வைத்துக் கொள்ளும்படியாகச் செய்தார்.

ஒரு பிராமணன் இறந்தவுடனே அவன் பிரேதத்தை மயானத்துக்குத் தூக்கிப் போகையில் கூடச்சென்ற அவருடைய ஸ்திரீ துளசிதாசரை சொம்ப தூரத்தில் கண்டு வந்தனம் செய்தாள். தாசர் அவ்வம்மணியைப் பார்த்து "ஸௌபாக்கியமுள்ள ஸ்திரீயே" யென்றார். அதற்கு அந்தம்மாள் என் புருஷன் இறந்து விட்டார் நானும் அவருடன் இறக்கப் போகிறேனென்று சொல்ல, துளசிதாசர் அந்த அம்மாளைப் பார்த்து "என் வாயிலிருந்து வார்த்தை வந்து விட்டது; இறந்தவரை நான் உயிர்ப்பிக்கிறேன்" என்று சொல்லி அந்தம்மாள் பந்துக்களைப் பார்த்து நீங்கள் ஈசுவர பக்தி செய்ய வேண்டுமென்று சொன்னார். தாசரும், மற்றவரும் பஜனை செய்ய ஆ! என்ன ஆச்சரியம்! இறந்தவரும் தூக்கத்தினின்று எழுந்தவர் மாதிரி எழுந்தார்.

அந்தக் காலத்தில் டில்லி சக்கரவர்த்தி இவர் செய்த அற்புதங்களைக் கேட்டு தன் அரண்மனைக்கு தாசரை தருவித்து தனக்கு ஸ்ரீபகவான் ராமரைக் காட்ட வேண்டுமென்று கேட்க, தாசர் மாட்டேன் என்று சொன்னார். சக்கரவர்த்தி தாசரை சிறையில் போட்டார். துளசிதாஸ் அனுமாரை ஸ்தோத்திரம் செய்ய, அநேகம் குரங்குகள் கும்பல் கும்பல்களாக வந்து சிறைச்சாலை கட்டடங்களை இடிக்க

ஆரம்பித்தன. இவ்விபரத்தைச் சக்கரவர்த்தி தெரிந்து தாசரை சிறையிலிருந்து விடுவித்தார்.

இவர் ஒரு காலத்தில் பிருந்தாவனத்துக்குப்போக அவ் வூராலயத்தில் கிருஷ்ணபகவான் விக்கிரஹத்தைக் கண்டு தனக்கு ஸ்ரீராமருடைய ரூபந்தான் பிரிய மென்றும் அவ் விதம் தரிசனம் கொடுக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்க அவ்விதமே பகவான் இவருக்குத் தரிசனம் கொடுத்ததாக வும் சொல்லப்படுகிறது.

துளசிதாசர் 91-வது வயசில் கி. பி. 1624-ம் வருஷத்தில் ஸ்தூலசரீரத்தை விட்டுச்சென்றதாகச் சொல்லப்படுகிறது தென்னிந்தியாவில் பிரசித்தி பெற்ற ஞானியாரான பட்டணத்துப்பிள்ளை என்பவர் தன் மனைவியிடம் ஒரு பெரியவர் கொடுத்துவிட்டுப்போன ஓலை நருக்கை வாசித்து ப்பார்க்க அதில் "காதறுந்த ஊசியும் வாராதுகாண் கடை வழிக்கே" என்று எழுதப் பட்டிருந்ததைப்பார்க்கவும் ஞா னம் உதயமாகி தன் சொத்துக்களை "சூறையோ சூறை" என்று இறைத்துவிட்டு வெளியேறி, இதரர்களுக்கு ஞா னோபதேசம் செய்தும் பாடல்கள்பாடியும் சஞ்சரித்ததற்கு ஒப்பாக துளசிதாசரும் தன் மனைவியின் வார்த்தைகளை கேட்கவும் ஞானம் உதயமாகி பக்தி மார்க்கத்தை ஜனங் களுக்கு எடுத்து உபதேசம் செய்து ராமாயணாதி கிரந்தங் களை எழுதி வைத்திருக்கிறார்.

இவரைப் போலொத்த பெரியவர்களுடைய சரித் திரத்தை நாம் ஒவ்வொருவரும் வாசித்துச் சிந்தனை செய்து வருவோமானால் உலக ஆசைகள் நாளடைவில் நம் மைவிட்டுவிலகி நாம் சன்மார்க்கமுறையில் நடக்க ஹேது வாகுமென்பதில் சந்தேகமில்லை. பிறருக்குத் தீங்கு இன்றி யும் சத்தியத்தை விட்டுப்பிறழாமலும் பொருள் சம்பாதிக்க வும்கூடும். பொருள் சம்பாதிக்க வேண்டுமென்ற பெருத்த ஆசையால் அல்லவா ஜனங்கள் சத்தியத்தை விட்டுப் பொது வாக விலகிப் போகிறார்கள்?

துளஸிதாஸர் திருவள்ளுவ நாயனார் ஔவையார் இவர்கள் சரித்திரத்தினால் பெற்றோர் கைவிட்டாலும் ஈசுவரன் நம்மைக் கைவிடமாட்டார் என்ற விஷயம் நமக்கு நன்றாய்த்தெரிகிறது. ஜனங்கள் அவர்களுடைய அக்ஞானத்தால் உலகவாழ்க்கையில் சத்தியத்தை விட்டு விலகி நடக்கத்துணிகிறார்கள். இவ்விதநடத்தை ஜனங்களிடத்திலுள்ள ஈசுவர பக்திக்குறைவைக் காட்டுகிறது. “அவனன்றியோரணுவுமசையாது கண்டாய்” என்ற ஆன்றோர் மொழியை பலர் தப்பு அபிப்பிராயம் கொண்டு, முயற்சி செய்யாமலிருக்கலாமென்று எண்ணங்கொள்ளுகிறார்கள். இது பிசகு. ஒவ்வொருவரும் சன்மார்க்கமுறையில் சுயநலத்தை நாடாமல் முயற்சித்தால் ஈசுவர அனுக்கிரஹம் கிடைக்குமென்பதிலாசேக்ஷபணை யில்லை. சத்தியமாய் நடப்பவனுக்கு இகத்திலும் பரத்திலும் சுகமுண்டு. அவ்விதமே நாமெல்லோரும் நடக்கக் கடவுள் துணை செய்வாராக.

ஓம். தத்ஸத்.

கே. எஸ். இராமசந்திரையர்.

புத்தக வரவு.

கற்பு விளக்கம்—தயா விருத்தி பரிபாலனம், தெ. அ. சாமிகுப்புசாமியவர்கள் இயற்றியது. இதன் விலை அணா 3. தபால் கட்டணம் பிரத்தியேகம். ரிப்பன் பிரஸ் சென்னை, ஆக்கியோர், இவர்களிடம் பெறுக. பெண்டிற்குப் பூஷணமாம் கற்பின் மாண்பை நன்கு எடுத்துக் கூறியும் கற்பால் மேன்மையடைந்த முற்காலத்துப் பெண்மணிகளை யுதாரணமாகக் காட்டியும், பதிவிரதை செய்யவேண்டிய கடமைகளைத் துலக்கியும், நூறு வெண்பாக்களால் ஆக்கியோர் கற்பின் பெருமையை விளக்கியுள்ளார். விசேஷ கஷ்டமின்றி யாவரும் எளிதில் அறியும்படி எளிய நடையில் இசைக்கப்பட்டுள்ளது. மேனாட்டு நாகரீகம் தாக்குவதால் நம்முடைய இந்தியநாகரீகத்தின் முக்கிய அம்சங்களைச் சாதாரண ஸ்திரீஜனங்கள் மறத்தல் கூடும். அது வெகு விபரீதமாய் முடியும். ஆகையால் சகல ஸ்திரீகளும் புருஷர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் படித்து இந்தியாவின் மேன்மைக்குக் காரணமாம் கற்பின் மேன்மையை யுணர்வார்களாக.

யுத்தமும் சீர்திருத்தமும்.
7-ஆம் தொகுதி

(336-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

நம்முடைய வியாபார முறையைப் பார்ப்போம். அது போட்டித் தன்மையைக் கைக்கொண்டு நிகழ்கின்றது. பலவான்தான் கடைசியில் நிலைப்பவனாகிறான். வியாபாரம் விருத்தியடையவும் கைத்தொழிற்சாலைகள் கட்டவும், பணி செய்யாச்சரக்குகள் புற நாட்டிலிருந்து வரவும், இவ்விஷயங்கள் கைகூடுவதற்காக கம்பேனிகள் என்ற வியாபாரச்ச்சங்கங்கள் ஏற்படவும், சுரங்கங்கள்வெட்டவும், இருப்புப்பாதைகள் திறக்கவும்வேண்டும். ஆகையால் வியாபாரத்துக்காக பல கம்பேனிகள் எழுதிக்கொடுக்கும் கடன் தஸ்தவேஜுகளுக்கு சிற்சில சமயங்களில் ஏராளமான லாபம் கிடைக்கக்கூடியதாயிருக்கிறது. இவ்வதிக லாபத்தையுத் தேசித்து 100 ரூபாய் பெருமானமுள்ள கடன் தஸ்தவேஜானது சிற்சில சமயங்களில் 150 அல்லது 200 ரூபாய் வரை கூட விலை ஏறிவிடுகிறது. இப்பத்திரங்களை வாங்கிவிற்றால் மிக்க லாபத்தை வெகு சீக்கிரத்தில் அடைந்து அதிவிரைவில் பணக்காரனாக ஆய்விடலாம் என்று ஜனங்கள் அதிக ஆவலுடன் அதிகமான விலை போட்டு இப்பத்திரங்களை வாங்குகிறார்கள். இப்படியிருக்கும் சமயத்தில் திடீரென்று கம்பேனியால் கொடுக்கப்படும் லாபம் குறைந்தால், அப்பத்திரங்களின் விலையும் திடீரெனக்குறையும். உடனே ஏராளமான விலை கொடுத்துவாங்கின பலர்களுக்கு பெருத்தநஷ்டம் ஏற்படுகிறது. அவர்கள் கொடித்துப்போய் விடுகிறார்கள். இவைகளில் ஏமாந்து போகிறவர்கள் ஆசைமலிந்து மனத்திடமற்றவர்கள் தான். இவர்கள் படும் துன்பங்களைக் கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நம்மனமுருகவில்லை. நாம பேசுவது மட்டும் வேதாந்தம். ஆனால் நம் சகோதரன் பணத்தை மோசக்காரர்கள் ஏமாற்றிப் பிடுங்குவதை நாம் கவனிக்கிறோம் இல்லை.

நம்முடைய கைத்தொழில் சாலைகளில் உழைக்கும் ஸ்திரீகளுடையவும் சிறுவர்களுடையவும் கஷ்டங்களைப்

பற்றி என்ன சொல்லுவோம். அவர்கள் சுகாதாரத்துக்கு விரோதமான இடங்களில் வியர்வை ஓடும்படியாய் வேலை செய்து வருவதைப்பற்றியும் அவர்களுக்குச்சரியான கூலி ஏற்படாமலிருப்பதைப் பற்றியும் நாம் அறியவில்லையா? அநேக ஸ்திரீகள் தங்களுடைய வரும்படியை அதிகப்படுத் தும்பொருட்டும் அடிமையைப்போல்உழைக்காமலபொருள் தேடவும் ஒரே வழி யேற்பட்டிருப்பதாக வேலை வாங்குகிற வர்களுக்கு அநேகமாய்த் தெரியும். ஸ்திரீகள் வெளியேறிப் போய் அவர்கள் தினசரி சாப்பாட்டுக்காக இவ்வித கிலேச த்தையடையும்படி பார்த்துக்கொண்டிருக்கும் நம்மை நாக ரீகம் உள்ளவர்களென்று எங்ஙனம் கூறலாம்? சிறுவர்கள் விளையாடவேண்டிய காலங்களில் வேலைகளில் அமர்ந்திருக் கவில்லையா? ஒரு ஏழைக் குடும்பத்தில் பல குழந்தைகள் பிறத்தல் சுகத்திற்கு காரணமா அல்லது துக்கத்துக்கு ஹேதுவா? தேசத்தின் ஐசுவரியத்தை அபிவிருத்தி செய்யவேண்டி கைத்தொழில்சாலைகளில் அநேகம் சிறுவர் கள் வேலை செய்து வருகிறார்கள். அதனால் தேசத்தின் பா ரமார்த்திக க்ஷேமமானது குறைந்து வருகிறது. ஒரு கடைக்குப்போய் ஒரு விலை உயர்ந்த பதார்த்தத்தை வாங்கி அது எவ்விதம் உண்டாக்கப்பட்டதென்று யோசிப்போமா னால், அநேகம ஸ்திரீகளும் குழந்தைகளும அநேக கஷ்ட மான தொழில்களை கீழ்க்கடையில் செய்திருப்பதால்தான் அப்பதார்த்தம் அவ்வித ஸ்திதியை அடைந்திருக்கிறதெ ன்றும அறியமாட்டோமா? தொழிற் பயிற்சியில் தேர்ச்சி யடைந்திருக்கிறோம் என்றும் அதனால் நாம் சுகமாய் வாழ் கிறோம் என்றும் பெருமை பாராட்டும் இந்நாகரீகத்தின் கீழ்க்கடையில் அநேக துக்ககரமான விஷயங்கள் நடக்கி ன்றனவென்று நனகு துலங்குகின்றது. சமாதான காலங் களில்கூட தேசத்துக்குள் சகோதரனுக்கும் சகோதரனு க்கும் பரஸ்பரம் போட்டிச்சண்டை நடந்துகொண்டேயிரு க்கின்றது. மூளையின் வல்லமை அல்லது பணத்தின் வல் லமையுள்ளவன் தான் ஜெயிக்கிறான். அதுவே சட்ட சம் மதம் என்றும் நியாயம் என்றும் கருதப்படுகின்றது. ஆனால் இதுவும் ஒருவித மிருகத்தன்மையல்லவா?

சித்பிரபஞ்சம் ஜடபிரபஞ்சம் என இரண்டு உலகங்கள் வெவ்வேருக இல்லையாகையால், இவ்வுலகத்தில் செய்யும் ஒவ்வொரு கெட்ட கருமத்துக்கும் ஸ்தூலப் பிரபஞ்சத்தில் ஒன்றும், சித்தாசிற ஆத்ம சம்மந்தமாக ஒன்றுமாக இருவித தீய பலன்களுண்டு. ஆத்ம சம்பத்துக்களும் குணங்களும் விருத்தியாகாமல் குன்றியிருப்பது நவீன நாகரீகத்தின் ஆத்ம சம்மந்தமான குறை. சகோதரத்தன்மையற்ற ஐஹிக அபிவிருத்தியின் பயனுகப் பொது ஜனங்களின் தரித்திரம் நிகழ்கின்றது. சகோதரபாவமின்மைதான் யுத்தங்களுக்குக் காரணம். தேசாதிபர்களின் பேராசையல்ல. நம்முடைய நாகரீகத்தில் உண்டாகும் வெளிப்படையானதும் கூடமானதுமான கொடூரங்களின் முடிவுதான் அரசர்களுடைய பேராசை நம்முடைய கைத்தொழிற்சாலைகள், பரிவர்த்தனைச்சாலைகள் இவைகள்தான் தேசத்தின் விஸ்தீரணத்தை அதிகரிக்கவும் அன்னிய தேசத்தை ஆக்கிரமிக்கவும் வேண்டுமென்ற கெட்ட கனவுகளை ஜனங்களுக்குள் உண்டாக்குகின்றன. ஆகையால் ஒரு தேசத்தார் மற்ருெரு தேசத்தாருக்கு விரோதமாக ஆயுதங்களையும், யுத்தத்துக்கு வேண்டிய ஸாமக்கிரியைகளையும் சன்னத்தம் செய்கிருர்கள். அப்பால் ஒரு தேசத்தார் மற்ருெரு தேசத்தாரின் வார்த்தையிலும் கருத்துக்களிலும் நம்பிக்கையற்றுப் போகிருர்கள். முடிவில் யுத்தம் நேரிடுகிறது. ஆனுல் யுத்தமானது சமாதான காலத்தில் நிகழும் துக்ககரமான கொடும் செயல்களின் முடிவேயன்றி வேறில்லை. கைத்தொழில் சாலைகளிலும், ஏழைகள் வாழும் சிறு சந்துகளிலும் சகிக்கொணுத்துயரத்தால் ஆண்பெண் குழந்தைகள் பெருக்கும் கண்ணீர் வீண் போகுமா? முக்கியமாய் தெளிவான பார்வையிருக்க வேண்டிய காலங்களில் ராஜதந்திரிகளின் கண்களை ஏழைகளின் கண்ணீரானது மறைக்கின்றது. சமாதானமாயிருக்க வழி தெரியாமல் ஒருதேச ஜனங்கள் மற்ருெருதேசஜனங்களுடன் யுத்தத்துக்குப்போ

கிறார்கள். ஹிருதயம் கடினமாக ஆக கண்ணும் கெட்டுப் போகும். ஆகையால் சரியான வழியும் தெரியாமல் போகிறது. தேச ஜனங்கள் என்றால் யார்? நானும் நீங்களும்தான். சமாதானகாலத்தில் நிகழும் கொடுமைகளை அறியாமல் கண் மூடித்தனமாய் நாமிருப்பதால் நானும் நீரும் இதரஸ்ரீ புமான்களனைவரும் யுத்தத்தின் உத்தரவாதத்திலிருந்து நீங்க முடியாது.

சிநேகிதர்களே, நாம் யுத்தத்திற்கு நன்றிபாராட்டக்கடவோம். இதற்கு முன் ஒரு காலத்திலும் இல்லாதபடி யுத்தத்தின் கொடுமையை நாம் அறியும்படி பிரகிருத யுத்தம் செய்துவிட்டது. இப்போது உலகெங்கும் இதுதான் கடைசியான பெரும் யுத்தமாக வேண்டுமென்ற எண்ணம் பரவியிருக்கின்றது. இப்போது போர்க்களத்தில் மறைந்திருந்து சண்டைபிடிப்பதற்காக வெட்டியுள்ள பள்ளங்களிலிருந்து சண்டையிடும் போர்வீரர் அநேகர் தங்கள்பிள்ளைகள் அல்லது பேரன்மார்கள் காலத்தில் இவ்வித யுத்தம நேரிடாதபடி தங்கள் உயிர்போனாலும் போகட்டும் என்று முடிவுவரை சண்டைபிடித்து விடுகிறதென்று தீர்மானத்துடன் யுத்தம் செய்கிறார்களல்லவா? அவர்கள் பரம்பொருளாகிய கடவுளின் அலுவலைச்செய்கிறார்கள். இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி, அவர்கள் சுத்தவீரர்களே. ஆனால் நாம் உண்மையான நாகரீகத்தை அடைந்தால் ஒழிய, இந்த யுத்தம் தான் கடைசியான யுத்தமென்றும் இனியுத்தம் நேரிடாதென்றும் சொல்ல முடியாது. அதாவது உண்மையாய் போர்முடிய வேண்டும். அதாவது போர் களத்திலும், கைத்தொழில் சாலையிலும் ஏழைகள் தெருக்களிலும் உட்போரும் வெளிப்போரும், ஒழியவேண்டும். பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்களான நாம் யுத்தத்தின் பாரமார்த்திகமான காரணங்களை யெடுத்துக் கூற வேண்டும். சகோதரத்தன்மைக்கு விரோதமான எண்ணங்கள், உணர்ச்சிகள், செய்கைகள் தான் அந்தக் காரண

ங்கள். எதார்த்தமான நாகரீகம் இன்னதென்பதைக் காட்ட நாம் முயல வேண்டும். ஒரு ஸ்திரீயாவது ஒரு புருஷனாவது சரித்திர தசையிலும், இழிவான தன்மையிலும், அக்ஞானத்திலும், இருந்தாலும், தேசத்தார்களுக்குள் யுத்தம் நேரிடக்கூடிய மூலகாரணங்கள் இருந்து கொண்டேயிருக்கும். எவ்விடத்தில் ஜனங்கள் பாரமார்த்திக வாழ்வையும் அத்யாத்ம சாஸ்திரத்தையும் அறியார்களோ, அங்கே போட்டிகளும், பேராசைகளும், பகைகளும், ஏற்படுகின்றன. ஒரு தேசத்துக்கும் மற்றொரு தேசத்துக்கும் ஏற்படும் பகையால் முடிவில் சண்டை யுண்டாகின்றது. ஆத்மகுணக் குறைவு நேரிடா வண்ணம் முயலுவது நம் கடமை. அக்குறையினால் தான் தன் மதம்தான் சரியென்ற பிடிவாதமும், பிறர்கொள்கையைச் சகியாமையும், தன் ஜாதி தான் உயர்வு என்ற கர்வமும், ஆண்தான் உயர்ந்தவன் ஸ்திரீதான் உயர்ந்தவள் என்ற கர்வமும், தான் சொல்வதே சரியென்ற முரண்டும், மற்றெல்லா அகங்காரமமகாரங்களும் உண்டாகின்றன.

ராஜரீகமுறையிலும் வியாபாரமுறையிலும் கூட சகோதர பாவத்தோடு ஒழுகமுடியும். அப்படிச் செய்வதால் மற்ற நாடுகளைவிட மிகவும் சிறப்புறலாம் என்று நாம் நிரூபிக்கவேண்டும். நம்முடைய ஞானமானது பிரஹ்மக்ஞானம். அரசனுக்கும் ராஜதந்திரிக்கும், தனிகனுக்கும் பணியாட்கும், மனிதனுக்கும் ஸ்திரீக்கும், வெள்ளை, கருப்பு, மஞ்சள், கபில, நிறமுள்ள மனிதர்களுக்கும், அவரவர்களுக்குத் தகுந்தபடி பிரஹ்மக்ஞானத்தில் தெரியவேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. இச்சபையின் முதனோக்கத்திற் கூறியபடி ஜாதி, மதம், பால், வர்ணம், நிறம், வித்தியாசமின்றி யாவருக்கும் பிரஹ்மக்ஞானம் பயன் படக்கூடியது.

பிரங்கிகளாலாகும் இந்த யுத்தம் முடிந்த பின்னர் வேறு யுத்தங்கள் உண்டாகும். முதலில் பணக்காரனுக்கும் பணியாளனுக்கும் சண்டை யேற்படும். அது எவ்வளவு

துன்பங்களையுண்டாக்கும் என்று இப்போது யாருக்குத் தெரியும்? வேலையாட்கள் கூட்டமாகக் கூடி ஒப்பந்தமாக தங்கள் தொழில்களைச் செய்யாமல் நிற்பதினால் தவறாது ஏற்படக்கூடிய கெடுதிகளை நாமறிவோம். ஆனால் இனிமேல். இக்கெடுதிகள் இன்னும் அதிகரிக்கும் என்று எண்ணுகிறேன் சுதந்திர விஷயத்தில் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் இப்போது நிகழும் வித்தியாசம் நீங்கி சமத்துவம் ஏற்படவேண்டுமென்று எல்லா தேசத்திலுமுள்ள ஸ்திரீகள் சண்டை போடுவார்கள். ஸ்திரீ புருஷர்களுக்குள் சமபாவமின்றி தாரதம்மியமிருக்கிறவரையில் ஜனசமூஹத்தில் அவர்கள் உரிமைகளைப்பற்றியும் சம்பள விஷயமாயும் அநீதி கட்டாயம் இருந்துகொண்டேயிருக்கும்.

ஆனால் நாம் யுத்தத்தைப் பற்றி பயப்படவேண்டாம். பீரங்கி யுத்தமானது யுத்தத்தின் கொடுமையைக் காட்டி எவ்விதத்திலும் அதை தவிர்க்கவேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொருவருடைய மனத்திலும் மனச்சாக்ஷியிலும் உதிக்கும்படி செய்துவிட்டது. ஆனால் சமாதானகாலத்தில் உண்டாகும் கொடுமைகளுக்கு விரோதமாய் நம்முடைய மனச்சாக்ஷியானது கிளம்பும்படி இன்னும் நேரவில்லை. ராணுவ யுத்தத்தினால் ஏற்படும் கொடுமைகளுக்கு விரோதமாக மாத்திரமல்லாமல், பணம், வியாதி, அஞ்ஞானம், ஆத்ம குணக் குறைவு இவைகளால் ஏற்படும் துன்பத்துக்கு விரோதமாக ஒவ்வொரு புருஷனும் ஸ்திரீயும் போராடத் தயாராகும்படி பணக்காரனுக்கும் பணியாட்கும் நடக்கும் சண்டையும் இதரப்பகைகளும் நம்மைத்தூண்டினால் நாம் நலம் பெறலாம்.

நாம் எல்லோரும் சமாதானத்துக்காக வேலைசெய்ய வேண்டும். ஆனால் பிசகான வழியில் சமாதானம் ஏற்படுமானால் புதுமாதிரியான போர் உண்டாகும் என்பதை நாம் மறக்கக்கூடாது. நகரவிஷயமாயும் கைத்தொழில் விஷயமாயும், ராஜரீக விஷயமாயும், உள்ள முயற்சிகளில் சகோதர

பாவம் உண்டாகும்படி நாம் உலகத்தாருக்குள் உண்மையான சமாதானம் ஏற்படும்படி கோரவேண்டும். இரு ராஜாங்கத்தாரும் வெளியில் சமாதான மடைவதோடு நிற்காமல், ஒவ்வொரு தேசத்துள்ளும், கைத்தொழில் சாலைகளிலும், ஏழைகள் வசிக்கும் அசங்கியமான சந்துகளிலும் காணப்படும் கொடுமைகளையும் அவைகளுக்குக்காரணமான போரையும், விலக்கமுயலுவோம். தேசத்தார்களை யாளுவதற்கு உண்மையான ராஜதந்திரத்தை பிரஹ்மஞானிகளாகிய நாம் உலகத்தாருக்கு கற்பிப்போம். ஆத்மா அழிவற்றதென்பதை யும் பரமாத்மாவின் சங்கற்பத்தை அனுசரித்து மனிதவர்க்கத்தின் மூத்தசகோதரர்களான ரிஷிகள் உலகத்தை ஆளுகிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே பிரஹ்மஞானசபை யேற்பட்டிருக்கிறது. உலகத்துக்கு ஜீவாதாரம் பிரஹ்மஞானத்திலிருக்கிறது. உலகத்துக்கு எது தேவையோ அதை கொடுக்க நாம் எல்லோரும் ஏற்பாடு செய்வோம். நம்முடைய மனித வர்க்கத்தில் ஜீவன் முக்தி நிலையை அடைந்த மகா புருஷர்களிடமும் அவர்களைத்தவிர மற்ற சாதாரண புருஷர் ஸ்திரீகளிடமும் பரமாத்மா விளங்குகிறார் என்பதையும் அப் பரமாத்மாவின் அம்சத்தின் பிரபாவத்தையும் எல்லாரும் நன்றாயுணர்ந்தால் தான் உண்மையானதும், ஸ்திரமானதுமான சமாதானமானது ஏற்படக்கூடியது.

ஆனால் வெளிப்படையான சமாதானமானது ஏற்பட்டால் எல்லாம் சரியாக நடக்குமா? அது மட்டும் உயர்ந்த நாகரீகமுள்ளவர்களாக நம்மைச் செய்யுமா?

இல்லை. யுத்தமன்னியில் நாகரீகம் ஏற்படாது. ஆனால் நாகரீகமானது யுத்தத்தை ஒழிக்கவேண்டும். இது முரண் போல் தோன்றினும் யதார்த்தமே. ஏனெனில் சகோதர பாவத்தை மறந்து மேற்படுத்தும் சமாதானமானது துன்பத்தையே யுண்டாக்கும். அவ்விதமே, மனோபாவத்திலும், சன்மார்க்க முறையிலும், ஆத்மாபிவிருத்தியிலும் நாம்

முன்னுக்கு வரவேண்டுமானால் ஆத்மாவைத் தூங்கும்படி விடக்கூடாது. ஸ்தூல உலகச் சண்டையை ஒழிக்கவேண்டுவது உண்மை தான். ஆனால் ஆத்மகுணங்களைச் சம்பாதிப்பதிலும் தீய சங்கற்பங்களை யொழிப்பதிலும் உண்டாகும் உட்போருண்டாவது அவசியம். அந்தர்முகமான ஆத்ம விசாரணையில் நாம் தினசரி யுத்தம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் நாம் நம்முடைய மரண மற்ற தன்மையையும், ஈசுவராம்சத்தையும நன்குணர்வோம். சமாதானம் தான் அடையவேண்டிய பாக்கியங்களில் முதன்மையானது. ஆனால் இனிமேல் வரப்போகும் மேலான நன்மையைக் கருதுவோனுக்கு, சண்டையும் பயன் தரத்தக்கதே.

நல்ல வேளையாக, நாம் எந்தத் தேசத்தாரைச் சேர்ந்திருக்கிறோமோ அந்த தேசத்தார்கள் யுத்தத்திலிழுக்கப்பட்டு, நியாயத்தை ஸ்தாபிக்க போராடுகிறார்கள். யுத்தவீரனுக்கு தர்ம யுத்தம் செய்வதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லையென்று ஸ்ரீகிருஷ்ண பகவான் அருளியிருக்கிறார். இந்த ஸ்தூல பூமியில் மட்டுமல்லாமல் மற்ற சூக்ஷ்ம உலகங்களிலும் நாம எப்பொழும் தர்மத்தை ஸ்தாபிக்க யுத்தம் செய்யத தயாராக யிருக்கவேண்டுமென்பதை நாம மறக்கக் கூடாது. ஏனெனில் சமாதான காலத்தில் மட்டுமல்ல யுத்த காலத்திலும் ஈசுவரன் மனிதனுடன் பேசுகிறார். கோவிலில் மட்டுமல்ல யுத்த பூமியிலுமே அவ்விதம் செய்கிறார். ஈசுவரன் நமக்கு சமாதானத்தைக் கொடுத்தாலும் சரி, யுத்தத்தைக் கொடுத்தாலும் சரி, எதைக் கொடுத்தாலும் அதை ஒப்புக் கொள்ளத்தயாராக யிருப்போமாக. ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் அலுவலை ஈசுவர கைங்கரியமென்று பாவித்துச் செய்யப் பயில்வோமாக. ஈசுவரன் இச்சைப்படி நடக்கட்டுமென்றும் சொல்லப் பயில்வோமாக. சமாதானம, அல்லது யுத்தத்தைக் காட்டிலும் பெரிதானது, அவர் இச்சைப்படி நடப்பது. விகாச முறையில் நாமிருக்கும்படியில் போராட்ட மன்னியில் உயிர் வாழ்வதும் விருத்தியடைவதும் முடியாத காரியம்.

ஆகையால் எல்லா உலகங்களிலும் நாம் சண்டைக்குப் போவோமாக. மனிதனும் ஈசுவரனும் ஒன்றாகையால் அநேகம் தடவை அபஜெயமடைந்தாலும் முடிவில் ஜெயம் நம்முடையதே.

ஓம் தத்ஸத்.

ஸி. ஜினராஜ தாஸர்.

புத்தக வரவு.

மீனாட்சிசுந்தரம் அல்லது "கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி". திராவிட வித்தியா மலர்: இதழ் க., மதுரை கி. வெங்கடராமையர் இயற்றிய ஒரு நவீன நாடகம். இதன் விலை அணா 6.

உயர்தரக் காகிதத்தில் மனோரம்மியமான வெளிக்கடுதாசியோடு, அச்சுப் பிழையின்றி உள்ளம் கவரும்படி வெளிப்போந்த இச்சிறு நாடகத்தை ஆவலுடன் படித்தோம். தம் அருமைப் பெண்ணைத் தகுந்த வரனைத்தேடி வாழ்க்கைப்படுத்த வேண்டுமே யென்று கவலுற்றிருந்த தம்பதிகளுக்குள், கல்வியும் குணமுமட்டுமுள்ள சுந்தரத்துக்குத் தமது அரும்புதல்வியைக் கொடுப்பதா அல்லது அவ்விரண்டுமற்ற கைப்பொருள் வாய்ந்த சங்கரனுக்குக் கொடுப்பதா என்ற வாக்குவாதம் நடந்ததையும் கடைசியில் நாராயணையர் தீர்மானித்தபடியே சுந்தரத்துக்குத்தான் அந்த பாக்கியம் கிடைத்த வரலாற்றையும், சுந்தரமும் மீனுவும் கல்யாணத்துக்கு முன் ஒருவரபிப்பிராயத்தை மற்றவர் தெரியாமல் காதலித்ததையும் நாராயணையர் தீர்மானத்திற்கு அவர் மனைவியார் கடைமுறையில் இணங்கியிருப்பதையும், ஆறு காட்சிகளுள்ள ஒரு அங்கமுள்ள நாடகமாக அமைத்துள்ளார். சம்பாஷணைகள் வெகு அழகாகவும், இயற்கையாய் ஒரு பிராமணகுலத்தில் நிகழ்வனபோலும் இருக்கின்றன. நாராயணையர் குமாரன் கிருஷ்ணசாமியும், அவன் மனைவியும், மீனுவும் ஒருவர்க்கொருவர் நேசித்தும் கேலிபண்ணியும் சம்பாஷிப்பது படிப்போர் முகத்தில் புன்முறுவலுண்டாகும்படி செய்யும் என்பதில் ஐயமில்லை. இந்நாடகத்தைப் படிப்போர் இன்பமுடன் படித்து திருப்தியுடன் முடிப்பார். நடிப்போரும எளிதில் நடித்துக் கேட்போர் மனதைக் கவரும்படி எழுதியுள்ளது. ஆரம்பமுதல் அந்தம்வரை நல்ல எண்ணங்களால் நிறைந்து, சிறுவர் சிறுமியர்கள் நலமுடன் வாசிக்கக்கூடிய நாடகமிது.

அங்கம் 4. களம் 4.

காலம்—காலை. **இடம்**—பிருந்தாவனத்தி லொரு சாலை. **நாடகபாத்திரர்**—கும்பாஜி.

கும்.—(ஒருபுறம் நோக்கி) இதோ, மீராவும் சுந்தரியும் வருகிறார்கள். கூட எவ்வளவு பக்தர்கள்! இப்போதிப்படி பவ்யமாயிருக்கும் சுந்தரியா அப்போதென் மனதையப் படிக்கலைத்தாள்! இவ்வளவு தூரம் தைரியமாய் வந்து விட்டேன். கொஞ்சம் முன் செல்லலாமென்றால் பயமாயிருக்கிறதே.

(அக்பர் வருகிறார்.)

அக்.—ஏனப்பா, தயங்கித் தயங்கி நிற்கிறாய்? இதோ யிந்த வழியாகத் தானவர்கள் செல்லுவார்கள். தைரியமா யிங்கேயே நின்றுகொண்டிருந்து அந்த மீராபா யிவ்விடம் வரும்போது—அதோ, அவர்களிருவரும் பாடிக்கொண்டு வருகிறார்கள். (**சுந்தரீபாய், ஏகநேத்திரன், அதிமூடன், இன்னு மனேகர்களுடன் மீராபாய் வருகிறாள்.**)

பயப்படாதே, அருகிற் போ.

(**கும்பாஜி மீராவின் காலில் விழுகிறான்.**)

கும்—அம்மா எனக்குப் பிச்சை யளிக்க வேண்டும்.

மீரா.—ஐயா, உம்மைப் போல் நானுமொரு பரதேசி. என்னிடத்தில் யாசிக்கும்படி என்ன இருக்கிறது.

கும்.—அம்மா, மீரா, உனது கருணையைக் கோருகிறேன். என்னைத் தெரியவில்லையா, மீரா?

மீரா.—(ஆச்சரியத்தோடு) சுந்தரீ!

சுந்.—ஆம் மீரா, நமது நாதர் தான்.

மீரா.—(கும்பாஜியைத் தூக்கி யெடுத்து) நாதா, இதென்ன?

தங்களை யிவ்விதம் பார்க்க மனம் தாளவில்லையே. அடையாளமே தெரியவில்லையே. முகத்திலுள்ள களையெல்லாமெங்கே போயிற்று? ஐயோ, முகம் கருத்து வாடியிருக்கிறதே. கன்னங்களொட்டிப்போய் எலும்பு தெரிகிறதே. சுந்தரீ, நானப்பவே சொல்லவில்லையா? எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கிறீரோ, இந்த துர்பாக்யையின் நிமித்தம்! அது ஈசனுக்குத் தான் வெளிச்சம்.

கும்.—நீ யிப்படிப் பேசுவதைக்கேட்டுஎன்னால் சகிக்க முடியாது. இந்தப் பாபியா லுனக்குச் செய்யப்பட்டுள்ள குற்றங்களனைத்தையும் மறந்தென்னை மறுபடியு மங்கீகரிப்பாயா?

மீரா.—நீங்களென்ன குற்றம் செய்தீர்கள்? நடந்ததெல்லாம் என் கர்மவிசேஷத்தால் தான். இப்படி நீங்களென் மன்னிப்பைக் கேட்பது உங்கள் பெருந் தன்மையையும், நல்ல மனதையும் காண்பிக்கிறது. இந்த சுந்தரீ தானென்ன குற்றம் செய்தாள்? நானனுபவிக்க வேண்டிய வேளை யனுபவித்தேன். அதற்காக ஒருவரைக் குற்றம் சொல்வது சரியல்ல. "எல்லா மருள் நன்மைக்கே இசைக்கின்ற தந்திரம்." (அக்பரை நோக்கி) ஸ்வாமீ, நமஸ்கரிக்கின்றேன். (கும்பாஜியை நோக்கி) நாதா, இவர் தானன்றை தினம் கிருஷ்ணாலயத்தில் கிருஷ்ண பகவானுக் காபரணத்தை யளித்த மஹாத்மா.

(எல்லோரு மாச்சரியத்தோடு பார்த்து வணங்குகிறார்கள்.)

அக்.—சர்வாந்தரியாமியாகவும், சகல லோக ரக்ஷகனாகவும், கபட நாடக சூத்திரதாரியாகவு மிருக்கப்பட்ட பகவா னுங்கள் மூவரையும் காப்பாற்றட்டும். நீங்களும் அவருடைய கிருபைக்குப் பாத்திரர்களே.

இந்த ஜகத்தின்கண் பகவானை யடைய முயலுகிறவர்களுக்கு அநேக மார்க்கங்களுண்டு. அவைகளில் நமது கர்ம விசேஷத்துக்குத் தக்கபடி நாம் மார்க்கத்தை யடைகிறோம்

இப்புவியில் பகவானை யனுபவிக்க, பக்தி மார்க்கம், ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், என்று சொல்லப்படும் மூன்று மார்க்கங்களுண்டு. நீயோ அவைகளுள் பக்தி மார்க்கத்தை யனுசரிக்கிறாய். இவைகளி லொவ்வொன்றிலும் மற்றிரண்டு களின் குணங்களு முண்டு. ஆனால் அவ்வம் மார்க்கத்தின் குணம் அதில் பிரதானமாயிருக்கும். இக்காலத்தில் பக்தி மார்க்கந்தான் வெகு சிலாக்கியமானது. பிறர் சொல்வதை நம்பாதிருப்பதும் தன்னைவிடப் பெரியவர்களில்லை யென்று நினைப்பதும் சொல்லுவதும் தாமஸிக் காலத்துச் சுபாவம். அப்படி யிருப்பதை மாற்றி வினயத்தை யளிக்கத் தக்கது பக்தி யொன்றே. அத்யந்த பக்தியோடு பகவானை யாசிரயித்து அநந்ய பாவத்தோ டவனிடம் மனதை யீடுபடுத்தினால் நம்மை ரக்ஷிக்கவேண்டிய பாரத்தை யவர் வஹிக்கிறார்.

'𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌵𑌹𑌾𑌮𑍍𑌯
𑌹𑌂 ॥'

அவர் நம்மிடத்தில் வைத்திருக்கு மன்பிற களவே கிடையாது. அவருக் கவரை யாசிரயிக்காதவர்களிடத்தில் கூட அன்பு குறைவு படுகிறதில்லை. ஆனா லவரிடமிருந்து பெருகிக் கொண்டிருக்கிற அன்பை நம்முடைய பக்திக்குத் தக்கபடிதா னனுபவிக்க முடியும். அப்படி யீசனைக் குறித்து இடை விடாமல் பக்தி செய்ய மனதை யொரே யிடத்தில் நிலை நிறுத்தத் தெரியவேண்டும். மீராபாய், இந்த விஷயத்தில் நீ சாதாரணமான ஜனங்களைவிட எவ்வளவோ மடங்கதிகமா யுழைத்திருக்கிறாய். ஆகையா லீசனுடைய அன்பையு மருளையும் பெற்றிருக்கிறாய். இது ஒரு ஜன்மத்தில் ஸாதிக்கக் கூடிய விஷய மன்று. நீ யநேகம் ஜன்மங்களிலுழைத்து அவ்வுழைப்பின் பலனை யடைந்திருக்கிறாய். ஆகையாற்றா னிந்த ஜன்மத்தில் எல்லாரும் கண்டு ஆச்சரியப் படத்தக்க காரியங்களை யெல்லாம் செய்திருக்கிறாய்.

நீ பகவானிடத்தில் வைத்திருக்கு மன்பிற் களவே யில்லை மேலு முனது பக்தியோடுகூட சங்கீதத்தையும் கலந்து ஈசனைத் தொழுகிறாய். ஆகையாலிவ் விரண்டும் வெகு சிலாக்கியமானவை. ஒவ்வொன்றும் மற்றொன்றுக் குதவி செய்கிறதோடும் கூட தன்னையும் சுத்தம் பண்ணிக் கொள்ளுகிறது. கீழ்ப்பட்ட விஷயங்களி லிருக்கும் ஆசையை மாற்றி பகவானிடத்தில் வைத்ததை பகவத் பக்தியாக்க இந்த சங்கீதம் வழியைக் கொடுக்கிறது. சங்கீதமென்பது விஷயங்கள் நிறைந்துள்ள இவ்வுலகில் பகவத் ஸாந்நித்தியத்தா லுண்டாகு மானந்தத்தை ஸூசிக்கிறது. சங்கீதம் ஆதிநாதமாயிருக்கப்பட்ட ஓங்காரத்திலிருந் துண்டாயிருக்கிற ஸப்த ஸ்வரங்களின் சேர்க்கையா லுண்டாகிறது. அந்த ஆதி நாதமோ பிரம்மத்தினிடத்திலிருந் துண்டானது. ஆகையாலிந்த சங்கீதம் பகவானை யடையும்படியான மார்க்கத்தி லுபயோகப்பட்டா லன்றி நன்குபயோகிக்கப்பட்ட தாகாது. அத்யற்புதமாயிருக்கு முனது சங்கீதத்தினா லுன்னுடைய பஞ்சேந்திரியங்களை யடக்கி அப்படி யடங்கின மனதைக் கிருஷ்ணனுக் கர்ப்பணம் செய்ய, அது புத்தியினிடத்திலிருந்து அனுபவங்களைக் கிரஹித்து நிர்வாணத்திலிருந்து பொழிந்துகொண்டிருக்கு மாநந்தத்தை யனுபவிக்கும்படியான பதவியை யுனக்குக் கொடுக்கிறது. இது நீ சங்கீதத்தைப் பக்திக் கீடு படுத்தினதா லுண்டாகிறது. இந்த பக்தி தான் தும்புரு, நாரதர், முதலியோர் செய்யும் பக்தி.

இப்போது நான் யாரென்று மிவ்விடத்தி லெப்படி வந்தேனென்றும் தெரிந்துகொள்ள வேணுமல்லவா? ஜனங்கள் பாடிஷா என்று சொல்லுகிற அக்பர் நான் தான். ஒரு அதிசயமான ஜீவனுடைய அனுபவங்களைப் பரிக்ஷிக்கும் பொருட்டும் சக்ரவர்த்தியின் கடமையை யனுசரித்து முன்னுடைய நடபடிக்கைகளை நான் கவனித்து வந்திருக்கிறேன். அதெப்படி யென்பது தெரிந்தாக வேண்டிய தொன்றுமில்லை. அது ராஜ தந்திரத்தை யடுத்தது.

மீராபாய், ஆத்மஞான மார்க்கத்தில் நீ நிரம்பவும் விருத்தியடைந்தவள். அதற்குந் தக்கபடி மனத்திடமும் விருத்தியடைந்திருக்கிறது என்பதைப் பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. சாதாரணமாக ஒரு அழகான வஸ்திரத்தைக் கண்டாசைப்பட்டு அதை வாங்கிக் கொடாததால் தீராக் கோபங்கொள்கிற ஒரு ஸ்திரீக்கு முனக்கு முள்ள பேதத்தைப் பார். ஆனால் நீயுமின்னும் விருத்தியடையவேணும். சக்தியானது அதற்குப் பிரமேயம் வருகிறபோது தான்வெளிவரும். அதற்கெதிராகவொரு சக்தியைக் கொடுத்தாற்றான் தன்னுடைய உண்மையான சொரூபத்தை வெளிப்படுத்தும். உன்னுடைய மனத்திடத்தைப் பரீக்ஷிக்க வேணுமென்று லதற்குத் தகுந்த சந்தர்ப்பங்கள் வேண்டாமா? ஒவ்வொருவருக்கு மிந்த மாதிரி பரிக்ஷைகளுண்டு. ஆனாலவை அவர்களுடைய மனத்திடத்துக்குத் தக்கபடியிருக்கும். ஆகையாற்றா னுனக்கு சாதாரணமான ஜனங்கள்ாற்றுங்க முடியாத கஷ்டங்க ளேற்பட்டன. நீயவைகளை யெதிர்த்து வென்றதினால் நிரம்பவும் விருத்தி யடைந்திருக்கிறாய்.

இப்போது பச்சாத்தாபப் படுகிற உன்பதி யுன்னை யிவ்வளவு தூரம் ஹிம்சித்தது ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியதாயிருக்கலாம். ஆனால் விவாகம் நடக்கும் முறையின் உண்மையைக் கிரகித்தோமானா லொரு ஆச்சரியமுமிருக்கவிடமில்லை. பதியும் பத்நியும் ஒருவரிடத்தில்லாத குணங்களை மற்றொருவர் விருத்தி செய்கிறதற்காக ஏற்பட்டவர்கள். தங்களுக்குள் நிஷ்காம்யமான காதலை யறியாத தம்பதிகளுக் கதனை யறியும் பொருட்டு அளவில்லா இக சுகம் கொடுக்கப்படும். அதை யறிந்த பிறகு அவர்கள் தங்களிடத்தில் வெளிப்படாத குணங்கள் வெளியாக்கத் தக்கப் பிரமேயங்களில் பிறப்பார்கள். கடைசியில் பூர்ணபுமானும் ஸ்திரீயுமாகி யளவிலா வாநந்தத்தை யனுபவிப்பார்கள் நடு ஸ்திதியில் தான் துடங்களெல்லா முண்டாகும். உண்மையை யறிந்தவர்க ளவைகளைக் குறித்து வருத்தப்பட

மாட்டார்கள். இப்போது நீ யிந்த நடு ஸ்திதியிலிருக்கிறாய். உன்னுடைய ஆத்மாவையே நம்பியிருக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டாய். அப்படிச் செய்ய உன் பர்த்தாவை யுனக்கெதிரியாகச் செய்வதைவிட வேறு நல்லமார்க்கமுண்டோ? உன் பர்த்தா உனக்கு ஆத்மஹத்தி செய்துகொள்ள உத்தரவளித்தபோது அவருடைய வார்த்தையை நீ தட்டாமலிருந்ததுமன்றி அவரையும் வெறுக்காமலிருந்தமை யாலிந்த பரிக்ஷையில் நீ ஜயித்தாய், தேவியும் பிரத்யக்ஷமானாள். உலகத்துக்கெல்லாம் ஞானம் ஊட்டும்படியான பாக்கியத்தையு முனக்குக் கொடுத்தாள். இதோ, பக்கத்திலிருக்கிற சுந்தரீ பாயோடு சேர்ந்து தனக்குக் கெடுதல்களை விளைவித்த உன் பர்த்தாவுக்கு மிந்த சுந்தரி பாய்க்கு மிதனாலெவ்வளவோ நன்மை யுண்டாயிருக்கிறது. இவ்விருவர்களுடைய கர்மங்கள் கொஞ்சம் குறைவு பட்டன. தாங்கள் பட்ட பச்சாத்தாபத்தினாலும் கஷ்டங்களாலும் எவ்வளவோ சுத்தியை யடைந்திருக்கிறார்கள். மேலும் பகவத் பக்தியின் மகிமையைக் கண்டார்கள். பகவானுடைய செயலை யறிந்தோர் யார்? அநேக ஜீவன்களின் கர்மங்களைக் கொண்டு அவரவர்களுக்குத் தக்கபடி நன்மையையும் தீமையையு மளிப்பதுமன்றி மொத்தமா யுலகம் விருத்தியடைந்து ஒவ்வொரு ஜீவனும் தன் மாதிரியாக வேண்டிய தற்தரிய மார்க்கத்தையு முண்டாக்கிக் கொள்ளுகிறார்.

இனிமேலிந்த மாதிரியான துக்கங்களுனக் கேற்படமாட்டா. உன்பதியுடனுமிந்த சுந்தரீ பாயுடனும் நீ ராஜ்யத்துக்கேகி அங்குள்ள ஜனங்களுக்குப் பக்தியை யதிகமாய்ப் போட்டிக்கொண்டு வெகுகால மிவ் வுலகுக் கோர் திலகம் போலிருப்பாய். நானடிக்கடி யங்கு வருவேன். எந்த வேஷத்திலென்று சொல்லமுடியாது. எனக்குன் சங்கீதத்தைக் கேட்கவேண்டுமென்று பிரியமுண்டாகிற போதெல்லா மங்கு வருவேன். நீங்களெல்லோரு மடிக்கடியில்லிக்கு வந்து சக்கரவர்த்தியின் அதிதி ஸத்காரத்தைப் பெற்றுக்கொள்ள வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(எல்லோரும் போகிறார்கள்.)

(காட்சி முடிகிறது.)

நாடகம் முற்றிற்று.

சுபம்.

பிரஹ்மக்ஞான தரிசனம் (பால பாடம்.)

அத்தியாயம் 20.

(முன் தொடர்ச்சி.)

மனித சரீர அமைப்பு:—இச்சா சரீரம்.

நம்முடைய அடுத்த சரீரமாகிய இச்சா சரீரமானது நாம் பிரக்ஞையுடன் உபயோகிக்கக் கற்றுக்கொள்ளுகிற இரண்டாவது சரீரமாயிருக்கிறது. அது நம்முடைய மானஸ சரீரத்தைவிடக் கீழானதும் பருமபடியானதுமாயிருக்கிறது. ஸ்தூல சரீரத்தைப் பார்க்கிலும் அது மேலானதும் நுண்ணியதாயு மிருக்கிறது.

நாமெல்லோரும் நம்முடைய ஸ்தூல சரீரங்களை உபயோகிக்கக் கூடும். அச் சரீரங்களைப் பற்றி நாம் மிகவும் நன்று யறிந்திருப்பதினாலே நம்மில அனேகர் அச்சரீரங்களை நாம் என்று நினைக்கிறோம். ஆனால் நாம் எல்லோரும் இச்சா சரீரங்களை உபயோகிக்காவது அப்படி உபயோகித்தாலும் அவைகளை உபயோகிக்கிறோமென்று அறியவாவது பழகவில்லை. ஆனால் அனேகர் அவ்விதம் செய்ய இப்போது கற்றுக்கொண்டு வருகிறார்கள்.

ஒன்று வேண்டுமென்று நாம் இச்சிக்கும்போதும் ஒரு பொருளை அல்லது ஒருவரை நேசிக்கும்போதும், விரோதிக்கும்போதும், அல்லது கோபிக்கும்போதும், நாம் சந்தோஷப்படும்போதும் அல்லது துக்கப்படும்போதும் தெரியாமலே நம்முடைய இச்சா சரீரங்களை உபயோகிக்கிறோம். இப்படியே நாம் அனேகம் கருவிகளைத் தெரிந்துகொள்ளாமலே உபயோகித்து வருகிறோம்.

உதாரணமாக தந்தி யனுப்புவதற்கும் மின்சார விளக்கை யேற்ற பொத்தானை அழுத்துவதற்கும் நம்மெல்லோருக்கும் தெரியும். மின்சாரமென்பது இன்னதென்று நம்மில் வெகு சொற்பமான பேர்களுக்குத் தான் தெரியும்.

அப்படியே நம்முடைய மற்ற சரீரங்களைப் பற்றின அறிவும். நாள் முழுதும் ஒவ்வொரு தினத்திலும் நாம் அவைகளை உபயோகித்து வருகிறோம். ஆனால் அவைகளைப் பற்றி நாம் அறிந்திருப்பது மிகவும் சொற்பம். என்றாலும் காலக்கிரமத்தில் அவைகளை நாம் பிரக்ஞையுடன் உபயோகிக்கக் கற்றுக்கொள்ளவேண்டி வரும். அப்போது நாம் அவைகளை சமயத்துக்குத் தக்கபடி இப்போது உபயோகிப்பது போல் ஒருங்கேயாவது தனித்தனியே யாவது உபயோகிப்போம். நம்முடைய இச்சா சரீரத்தை உபயோகிக்கக் கற்றுக் கொள்வது தான் விகாசமுறையில் அடுத்த படி.

ஸ்தூல சரீரங்கள் இரவில் தூங்கும்போது நாமெல்லாம் இச்சா சரீரங்களை உபயோகிக்கிறோம். நாம் சொப்பனங்களென்று சொல்லுகிற அனேக விஷயங்கள் புவர் லோகத்தில் இச்சா சரீரங்கள் மூலமாய் நாம் பார்த்துக் கேட்டு நடத்தின அனேக விஷயங்களின் ஞாபகங்களாம். சொப்பனங்கள் ஏன் உண்டாகின்றன, எப்படி உண்டாகின்றனவென்பதை யோசிப்போம்.

நீயோ ஆத்மா சரீரமல்ல. ஆத்மாவாகிய உனக்குத் தூக்கமென்பது இல்லை. உனக்குத் தூங்கவேண்டியது மில்லை ஏனெனில் உனக்கு எப்போதும் களைப்பு யேற்படுகிறதில்லை. ஆனால் உன்னுடைய ஸ்தூல சரீரம் களைப்படைகிறது. ஏனெனில் அது ஒரு பிராணி. ஆகையால் அதற்கு இளைப்பாறுதலும் தூக்கமும் வேண்டும். நீ அதைத் தூங்கவிடாவிட்டால் அது இறந்துபோம். ஆத்மாவாகிய நீ அதில் இருந்து அதை உபயோகித்துக் கொண்டிருக்கும்போது நீ அதைத் தூங்காமல் வைத்துக்கொள்ளுகிறாய். அதற்கு இளைப்பாறுதல் வேண்டும்போது நீ மெதுவாய் அதைவிட்டு வெளியேறி அதற்குப் பதிலாய் இச்சா சரீரத்தை உபயோகித்துக் கொள்ளுகிறாய்.

ஸ்தூல சரீரத்திலிருக்கும்போது உன்னால் செய்யமுடியாத அநேக உபயோகமுள்ள காரியங்களைச் செய்வதற்

காக சொப்பனத்தில் நீ ஸ்தூல சரீரத்தை விட்டு வெளியேறிப்போகிறாய். பூலோகத்தில் உன்னால் நினைக்கக்கூட முடியாதபடி அவ்வளவு விநோதமான அனேக நூதனக் காட்சிகளை அனுபவிக்கிறாய்.

உன்னுடைய இச்சா சரீரமானது உன் மானச சரீரத்தைப்போல் அவ்வளவு அழகுள்ளதல்ல. ஆனாலும் அது உன் ஸ்தூல சரீரத்தைப் பார்க்கிலும் மகாநேர்த்தியானது. அது ஸ்தூல சரீரத்தைவிட அதிக பெரியது. அதிக காந்தியுள்ளது. அதை ஊடுருவி அனேக அழகான வர்ணங்கள் ஜ்வலிக்கும். நீ நல்லவனாயும் சுயநயம் பாராட்டாதவனாயும் பிறருக்கு உபகாரமுள்ளவனாயு மிருந்தால் மேற்சொன்ன வர்ணங்கள் உன் இச்சா சரீரத்தில் நிச்சயமாயிருக்கும்.

பலவகை ஜனங்களுடைய ஸ்தூல சரீரங்கள் எப்படி ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருக்கின்றனவோ, அப்படியே அவர்களுடைய இச்சா சரீரங்களும் வித்தியாசமாயிருக்கும். எப்படி சில ஸ்தூல சரீரங்கள பரும்படியாகவும் குரூபமாகவும், மெலிவாகவும வியாதியுள்ளதாகவும், அல்லது சௌக்கியமுள்ளதாகவும், அழகாகவும், அல்லது சாதாரணமாகவும் இருப்பதுபோல இச்சா சரீரங்களும் இருக்கின்றன. சொந்தக்காரர்கள் எப்படி அவைகளை அமைத்திருக்கிறார்களோ அதற்குத் தக்கபடி சரீரங்கள் இருக்கின்றன. சரீரங்களின் அமைப்பு விஷயத்தில் நம்மால் யாதொன்றும் செய்யத் தக்கதில்லை யென்றும் கடவுள் தன்னிஷ்டப்படி எவ்விதம் அமைக்கிறாரோ அவ்வித சரீரத்துடன் நாம் திருப்தியுட னிருக்கவேண்டுமென்றும் கிறிஸ்து மதஸ்தர்களுடைய கொள்கை. பிரஹ்மக்ஞானமோ சரீரங்களின் அமைப்புக்கு நாமே காரணஸ்தரென்றும் நாம் நல்ல எண்ணங்களையும் நல்ல இச்சைகளையும் நல்ல செய்கைகளையும் விருத்திசெய்து வருவோமாகில் நமக்கு நல்ல சரீரங்கள் அமையுமென்றும் போதிக்கின்றது. எவன் எவ்வித சரீரத்துக்கு பாத்தியஸ்தனாகிறானோ அதையே அவனடைகிறான். அவலக்ஷணமுள்ள அல்லது நோய் பற்றிய அல்லது அங்கஹீனமான சரீரம் நமக்கு வாய்த்தால் அதற்கு நம்மையே

குறை கூறிக்கொள்ளவேண்டுமேயன்றி கடவுளைத் தூஷிப்பதற்குக் காரணமில்லை யென்றும் மேலும் அழகுள்ளதும் திடமுள்ளதும் சௌக்கிய முள்ளதுமான சரீரத்தை நாம் அடைந்தால் அதைப் பற்றி வேறொருவன் பொறாமைப் படவாவது கடவுள் நம்மிடத்தில் பார பக்ஷமாயிருந்தாரென்று நினைக்கவாவது கூடாதென்றும் பிரஹ்மஞானம் போதிக்கிறது. நல்ல எண்ணங்களால் நல்ல மானச சரீரம் அமைவதுபோல் நல்ல இச்சைகளினால் நல்ல இச்சா சரீரம் உண்டாகிறது.

வி. வெங்குசாமி ஐயர்.

புத்தக வரவு.

ராஜாங்கங்களுக்குள் சமாதானம்:-சென்றபூர்ணசந்திரோதயச் சஞ்சிகையில் கூறியபடி மாதா மாதம் பிரசுரமாகி வரும் துண்டுப் பத்திரிகைத் தொடரில் 111-வது துண்டுப் பத்திரிகையானது எமது பார்வைக்கு வந்தது, சமாதான விஷயமாய் இருதிறத்தும் அதிகாரிகளுடைய பேச்சுகள் நிருபங்களின் இரண்டாவது தொடரை இதில் பிரசுரித்திருக்கிறார்கள். (1) 18—12—916-ல் அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களின் பிரசிடெண்டவர்கள் யுத்தத்தில் சேர்ந்த ஒவ்வொரு ராஜாங்கத்தாருக்கும் எழுதிய நிருபம் (2) 26-12-916-ல் ஜர்மனி ராஜாங்கத்தாரால் மேற் கூறிய நிருபத்துக்குப் பதில் (3) 10—1—917-ல் இங்கிலாந்து பிரான்சு முதலிய ராஜாங்கத்தாருடைய பதில் (4) 13—1—917-ல் மேற்படியாருடைய விவரித்த பதில் (5) 22—1—917-ல் பிரசிடெண்டு வில்சன் அவர்களால் ஐக்கிய மாகாணங்களின் செனட் என்ற ஆலோசனை சபையில் செய்த பரசங்கம். இந்த துண்டுப் பத்திரிகையில் இவ்வைந்தும் அடங்கியிருக்கின்றன. பிரசிடெண்டு வில்சன் அவர்கள் செய்த பிரசங்கத்தில் பொதிந்துள்ள உண்மைகளும் அபிப்பிராயங்களும் யாவராலும் மெச்சத் தகுந்தன. (1) இந்தக் கோரமான யுத்தத்தின் முடிவில் ஏற்படும் சமாதானமானது ஸ்திரமானதாகவிருக்கவேண்டும். சகல ராஜாங்கங்களும் சேர்க்கையாக பலமுள்ள ராணுவத்தையும் கப்பல் முதலிய யுத்தத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளையும் சேகரிக்கவேண்டும். அப் பொது பலமானது உலக ராஜாங்கங்களில் பல சேர்ந்துகொண்டாலும், அவைகளை ஆக்கிரமிக்கக் கூடிய அவ்வளவு பலமுள்ளதாயிருக்க வேண்டும். (2) இந்த யுத்த முடிவில் ஒருதிறத்தார் ஜயித்ததாகவும் மற்றொரு திறத்தார் தோல்வியடைந்ததாகவும் ஏற்படக் கூடாது. இது இருதிறத்தார்களுக்கும் திருப்தியாயிருக்காதாயினும் யோசிக்கும் அளவில் சரி யென்றே தோன்

றும். ஏன் எனில் தோல்வி யடைந்தவர்கள் மனதில் உண்மையான சமாதானம் உண்டாகாது. அபஜயத்தை மாற்ற ஒரு சமயத்தை யெதிர் பார்த்துக்கொண்டே யிருப்பார்கள். மனது விரோதத்தையே பாராட்டி நிற்கும். இருதிறத்தாரும் சமநிலையில் இருந்தே ராஜியாகவேண்டும் (3) எவ்விதம் ஒரு ராஜாங்கத்துக்குள் பலவான், அபலன், பணக்காரன் ஏழை யென்ற வித்தியாசமின்றி சட்டமானது உபயத்திறத்தாரையும் சமமாகக் கருதுகிறதோ அம்மாதிரியே ராஜாங்கங்களுக்குள் பூவிஸ்தீரணம், ஜனவாக்கு, ராணுவபலம், இவைகளுள்ள ராஜாங்கத்துக்கும் அவைகள் இல்லாத ராஜாங்கத்துக்கும் வித்தியாசமின்றி, நியாயப்படி அவரவர்களின் பாத்தியதா பாத்தியங்களை அனுசரித்தே நடக்கவேண்டுமென்றே விதியும் ஏற்படவேண்டும். மீறுகிறவர்கள் பொது பலத்தின் தண்டனைக் குள்ளாவார்கள். (4) சமாதானமானது நிலைத்திருக்க வேண்டுமானால், ராஜாங்கங்களுக்குட்பட்ட பொது ஜனங்களுடைய சம்மதத்திற்கு விரோதமாக அவர்களைக் கட்டாயப் படுத்துவது சரியல்ல. ஒரு வேளை அப்படியிருந்தும் சமாதானம் நிகழுமாயினும், அதுவும் சரியல்ல. தட்டுமுட்டுகளை ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டில் மாற்றுவதுபோல் தேச ஜனங்களையும் அவர்கள் சம்மதமின்றி ஒரு ராஜாங்கத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவதற்கு ஒருவருக்கும் பாத்தியமில்லை. உதாரணமாக, போலண்டு தேசத்தாரை ஒருங்கே சேர்த்து, அவர்கள் சுயாட்சி பெறுவது அவசியம் என்று சகல ராஜதந்திரிகளும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். (5) ஒவ்வொரு தேசத்தாரும் கடலுக்குத் தாராளமாய்ச் சென்று வியாபாரம் செய்யும்படியான போதுமான துறைமுகம் முதலிய சௌகரியங்கள் ஏற்படவேண்டும். அப்படித் தற்போதில்லையாயின், மற்ற ராஜாங்கத்தார் போதுமான இடத்தை கடல் வரை தரும்படி செய்யவேண்டும். ஒரு வேளை இடத்தை முற்றிலும் கொடுக்க இணங்காதபோதிலும், துறைமுகத்துக்குப் போகும்படி போதுமான இடத்தை ஒரு திறத்தாருக்கும் சேராத பொது விடமாகச் செய்யவேண்டியது. (6) சமுத்திரத்தில் ஒரு நாட்டிலிருந்து மற்றொன்றுக்குச் செல்லும் மார்க்கமானது உலகத்துக்கே பொதுவாக வேண்டியது. மேற் கூறிய பொது பலத்தின் கடமையானது மேற் கூறிய நிபந்தனையை ஒரு திறத்தாரும் மீறாதபடி பாதுகாப்பதாகும். ஒரு ராஜாங்கத்தாரும் குறிப்பிட்ட தொகை அல்லது பலத்துக்கு மேற்பட்ட சைந்நியம் முதலிய யுத்த சன்னாகங்களைச் சேர்க்கக் கூடாது. மேற் கூறிய நிபந்தனைகளுக்கு யுத்தத்திலிருக்கும் இருதிறத்தாரும் சம்மதித்தால் தான் சமாதானமானது நிலைக்கும். அப்படிச் சம்மதித்தால் ஐக்கிய மாகாணத்தாரும், சமாதானத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யவும், அப்படி யேற்படும் சமாதானம் உலையாதபடி பொறுப்பு எடுத்துக்கொள்ளவும் முடியும் என்றும் சொன்னார். பிரசிடெண்டு வில்சன் அவர்களுடைய உயர் நோக்கங்களும், உண்மையான சமாதனம் ஏற்படவேண்டுமென்ற பேரவாவும், யுத்த முடிவில் ஏற்படும் சமாதானமானது உலகத்துக்கு க்ஷேமகரமாயும், நிலைத்திருக்கும்படியான தன்மையையுடையதாயுமிருக்கும்படி செய்யும் என்று எண்ணுகிறோம்.

விவாஹ வயதை உயர்த்தல்.

1917ஆம் ஜூன்மீ 3உ மைசூரில் ஜனாசார சீர்திருத்த விஷயமாய்க் கூடிய மஹா ஸபையில் மைசூர் சீப்கோர்ட் ஜட்ஜ் பிரஹ்மஸ்ரீ சந்திரசேகர ஐயரவர்கள் மனைவியார் மாதுஸ்ரீ பார்வதியம்மாளவர்களால் மிகத் தெளிவாயும், உறுதியாயும் கன்னட பாஷையில் ஸ்திரீபுமான்களின் விவாஹத்துக்குரிய வயதை உயர்த்தும்படி பிரேரணை செய்யப்பட்டது. மாட்சிமை தங்கிய யுவராஜா அவர்களையும் திவானவர்களையும், மற்றும் வந்திருந்த ஸ்ரீமான்களையும், ஸ்ரீமதிகளையும் பார்த்து அவர்கள் பேசியது பின் வருமாறு:—

பெண்கள் மஹா ஸபையில் எழுந்து பேசுவது புதிதல்ல. நமது புராணங்களிற் கூறியுள்ளபடி, கார்கீ, மைத்ரேயீ, காந்தாரீ, முதலிய பெண்மணிகள் தொன்றுதொட்டு ஆசரித்து வந்த பழைய வழக்கமேயாம். அப்பழைய வழக்கத்தை யநுசரித்தே நானும் இச்சபையின் முன் வந்து பேசவேண்டுமென்று, அறிவிற் சிறந்த ஸ்ரீமானாகிய நமது வெங்கட கிருஷ்ண ஐயர் அவர்கள் கேட்டுக்கொண்ட பிரகாரமே நான் இங்கு பேசத் துணிந்தது. மிகவும் முக்கியமான ஓர் விஷயத்தில், என் அபிப்பிராயங்களை இம்மகா சபையின் முன்னிலையில் எடுத்துரைக்க நேர்ந்ததற்காக அவர்கட்கு என் மனப்பூர்வமான வந்தனம் ஸமர்ப்பிக்கிறேன்.

நான் பேசக் குறிப்பிட்டிருக்கும் விஷயம் "பெண்களுக்கும் பையன்களுக்கும் இப்போது வழக்கமாயிருக்கும் வயதைக் காட்டிலும் அதிகமான வயது வந்தபிறகே விவாகம் செய்விப்பது தான் உத்தமம்" என்பதேயாம்.

முதலில் நான் சொல்லுவது, இத்தகைய விஷயத்தில் நாம் செய்வனயவும் திடமும் சாசுவதமுமான அஸ்திவாரத்தின் மேல் நிலைக்குமாறு, நமது ஆசாரத்திற்குப் பரம ஆதாரமான சாஸ்திரங்களைப் படிக்கவேண்டியது அதியவசியம் ஆனால் அது, நுனிப்புல் மேய்கிற படிப்பாயிராமல் ஆழ்ந்த படிப்பாயிருத்த லவசியம். இவ்விஷயத்தில் சாஸ்திரங்களை ஸமுத்திரத்திற்கொப்பிடலாம். மேலாக மட்டும் வலை போட்டால் போதுமென்று ஒருவன் இருப்பானாகில் அவனுக்கு மீன்கள்தான் அகப்படும். எவனொருவன் சமுத்திரத்தில் ஆழ அமிழ்கிறானோ, அவனே ஏராளமான விலையுயர்ந்த ரத்தினங்களையும் முத்துக்களையும் அடைவான்: அப்படியே சாஸ்திரங்களையும்

ஒருவன் மேலாகமட்டும் பார்ப்பானுகில், அவன் அற்ப விஷயங்களை யும் கக்ஷிவாதத்திற்குக்காரணமாகும் விஷயங்களையும் மட்டுமேதான் அறியக்கூடும். மாசற்ற மனத்தோடும் நுணுக்கமாகவும் ஆராய்வோர்க்கு உண்மையான உடகருத்து விளங்கும். ஸரியான பருவத்திற்கு முன்விவாகம் செய்வதனுல் விளையும் தீமைகளையும் சரியானபருவம் வரும் வரை விவாஹத்தைத் தள்ளிவைத்தே வருவதின் குணங்களை யும், சாஸ்திர வாயிலாக இரண்டு மூன்று நாள் வரை விவரிக்க இய லுமாயினும், சில விஷயங்களுக்குள் நான் பேசி முடிக்க வேண்டி யிருக்கிறது. வேத சாஸ்திரங்களின் உண்மையான கருத்தையும், ஸாரத்தையும் நன்கு ஆராய்ந்து பண்டித ஸ்ரீ A. மஹாதேவ சாஸ் திரி அவர்கள் எழுதியுள்ள புஸ்தகத்தில் இவ்விஷயத்தை ஸவிஸ் தாரமாய்க் கண்டுகொள்ளலாம். ஆனுல் நான் இம்மட்டில் நிச்சய மாய் வற்புறுத்திச் சொல்லலாம். விவாஹ வயதைத் தக்கபடி தள் ளிப் போடும் விஷயத்திற்கு, நிச்சயமாய்ச் சாஸ்திரங்கள் நமக்குத் தடையாக இல்லை.

படிப்பு முடியும் வரை சிறு பிள்ளைகள் விவாகம் செய்துகொள் ளாமலிருப்பதே உத்தமம், சாஸ்திர சம்மதம் என்பதை இக்காலத் தில் ஆக்ஷேபிப்பவர் ஒருவருமே யில்லை. வேண்டிய அறிவையும் உலக அனுபவத்தையும் பெற்று இல்வாழ்க்கையின் கடமைகளை சாமர்த்தியமாய்க் கொண்டு செலுத்தும் திறமை வாய்ந்த பிறகே கிருஹஸ்தாசிரமிக ளாகலாம். ஸ்திரீகள் விஷயத்திலும் இப்படியே தான். இல்வாழ்க்கையையும், அதற்கு அவசியமான உண்மைகளை யும் நன்ருய் ஸ்திரீகளும் கல்யாணத்திற்கு முன்பாகத் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியம்.

இக்காலத்தில் கெட்டிக்காரப் பிள்ளைகள் படித்து முடிவதற் கே 22 முதல் 25 வயது வரை ஆகிறது. சாமான்யமான பிள்ளை களுக்கு 27 வயது வரைகூட படிக்கவேண்டி யிருக்கும். அதற்குப் பிறகு ஓர் கன்னிகையை மணந்துகொள்ள வேண்டுமென்றிருப்ப வனுக்கு 12 வயதுப் பெண்ணையாவது, அதற்கும் சிறு வயதான பெண்ணையாவது கல்யாணம் செய்வித்தல் சரியல்ல. தமக்கு ஒத்த வயதினராயும் கல்வியுடையவராயும் தம் ஜாதியார்க்குள்ளே யே கன்னிகைகள் கிடையாததால், அந்நிய ஜாதிப் பெண்களை மணந்தவர் எத்தனை பேரை நாமறிந்திருக்கிறோம், இது துக்ககர மான ஸ்திதியல்லவா?

நமது பெண்களுக்குத் தற்காலத்தில் விவாஹம் செய்யும் வய தோ, அவர்கள் படிப்பு நிறைவேறச் சொற்பமும் போதாது. எழு

தப் படிக்கவும், கணக்கு வைக்கவும், குழந்தைகளை வளர்க்கவும். நல்வழியிற் பழக்கவும், புக்ககத்துப் பெரியோர்களுக்குப் பணிவிடை செய்யவும், வீட்டுக் காரியங்களை மேல்பார்க்கவும், தைக்கவும், இன்னும் எத்துணையோ அவசியமானவைகளை யெல்லாம் சற்பித்தல் தான் பெண்கட்குற்ற கல்வியாகும். எட்டு வயதுமுதல் 12 வயதுக்குள் கல்யாணம் நடைபெறும் தற்காலநிலையில், இவைகளுக்கெல்லாம் சாவகாச மெங்கே? கல்யாணத்திற்குப் பிறகு குறைப் படிப்பையும் படித்துக் கொள்ளலா மென்பதோ முடியாது. மாமியார் முதலியவர்கள் வழக்கமாகத் தடங்கலா யிருப்பார்கள். ஆகவே தற்கால முறையின் பெரிய தீமை என்னவெனில் நமது பெண் மக்களுக்குச் சரியான கல்விப் பயிற்சி தொடுக்கக்கூடா திருத்தலேயாம். இதைக் காட்டிலும் பெருந்தீமை தம்பதிகளின் தேஹ சௌக்கியத்திற்கு வரும் இடையூறேயாம். கல்யாணம் என்றால் வீண் வாய்ப் பேச்சல்ல. அது விஷயமாக நம் உத்தரவாதங்களும் பொறுப்பும் அதிகம். வைத்திய சாஸ்திரத்தின் பிரகாரம் ஒரு பெண்ணுக்கு 12வயது தொடங்கி 16 வயதுவரை வளரும் பருவம் ஏற்படுகிறது. ஒரு பையனுக்கு 14வயது முதல் 20 வயது வரை அப்பருவம் ஏற்படுகிறது. சரீரக் கூறுபாடு பூர்ணமான பக்குவமடையுமுன்னர் கிருஹஸ்தாசிரமத்திற் பிரவேசித்தல், சரீரசௌக்கியம் நீடித்திருப்பதற்கு விரோதம். இளம் பருவத்திலே குழந்தைகளைப் பெறுவதினால் சரீரமே உலைந்து போகிறது. 13 வயதுள்ள ஒரு குழந்தை ஒரு பிள்ளையைப் பெறுவாளானால், அதை எப்படி நேராக வளர்ப்பதென்று அவளுக்குத் தெரிய இடமில்லை. இதனாலேயே நம் தேசத்தில் குழந்தைகளுக்கு வியாதிகள் பீடிப்பதும், குழந்தைகள் இறப்பதும ஸர்வ ஸாதாரணமா யிருக்கிறது.

இன்னொரு தீமையும் உள்ளது. இத்தனை வயதுக்குள்ளே அவசியம் விவாஹம் செய்து தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தமான வழக்கத்தினால், பெண்ணுக்கு இசைந்த புருஷனை வென்றுகூடக் கவனிக்க இடமில்லாமல், சீக்கிரம் கிடைத்த வரனுக்குக் கொடுத்துப் பெண் தன் வாழ்நாள் முழுதையும் துக்க சாகரத்திலேயே மூழ்கியே யிருக்கும்படி செய்யவும் பெற்றோர்கள் காரணமாகிறார்கள்.

பெண்ணுக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்து தீரவேண்டி யிருக்கிறது என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர் கண்டுகொண்டு அநியாயமான வர சுல்கம் வாங்குகிறார்கள். அது இப்போது ஒரு

வர்த்தக வியாபாரமாகவே வழக்கத்தில் வந்துவிட்டது. மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தேர்ந்த வானுக்கு ரூ. 2000மும் எப். ஏ. பரீக்ஷை தேர்ந்த வரனுக்கு ரூ. 4000மும், பி. ஏ. பரீக்ஷை தேறின வரனுக்கு ரூ. 6000 மும் விலையாயிருக்கிறது. பணக்காரர்கள் கேட்டதைக் கொடுக்கக் கூடும். பணமில்லாதவர்களின் கதி என்ன? தங்கள் மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் செய்விப்பதற்குள் தம் வீட்டை விற்று, ஆண்டியாக வேண்டியிருக்கிறது. இதுவும் கூடாதவர்கள் என்ன செய்வார்கள்? தங்கள் பெண்களை மணம் செய்விக்க மாட்டாமையால், துக்கித்துத் தவிக்கிறார்கள். பெண் சிறிது புத்திக் கூர்மையுள்ளவளாயும் சூசனையுள்ளவளாயுமிருப்பாளானால், சில சமயங்களில் தமக்காகப் பெற்றோர்கள் வெளிக் காட்டமாட்டாமல் வருந்தும் துக்கத்தை உற்றுணர்ந்து தாம் துச்ச ஹேதுவாயிருப்பதினும் இறப்பது நலமென்று கருதி கிணற்றில் வீழ்ந்தும், தீக்கிரையாகியும் உயிர் மாய்த்துக் கொள்கிறார்கள். இவையெல்லாம் நடந்திருப்பதை நாம் நன்கறிவோம். மற்றுஞ்சிலர் அதிக தைரியத்தோடு, தம் பெண்களுக்கு விவாகத்தை காலங் கடத்தி நடத்திக்கொள்ளலாமென்று இருப்பார்களானால் அயல் வீட்டுப் பெண்டிர் அப்பெண்ணின் தாயாரைப் பார்த்து "இத்தனை நாள் வரை உங்கள் பெண்ணுக்கு விவாகமாகாமலிருப்பதை நீங்கள் எப்படிச் சகிக்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். இவ்விதமபவாதத்திற்குப் பயந்து தங்கள் தீர்மானங்களை இழந்துவிடுகிறார்கள். கடைசியில் எப்படியாவது கல்யாணம் சீக்கிரம் செய்து தீரவேண்டியிருக்கிறதென்று எண்ணங்கொண்டு தங்கள் பாரம் தீரவேண்டுமென்று நினைத்துச் சில சமயங்களில் ஐம்பது, அறுபது வயதுக் கிழவர்களுக்குக் கூடத் தம் குழந்தைகளை மணம் செய்விக்கிறார்கள். ஆ! இத்தகைய பாவமும் சம்பவித்து வருகிறதே! என்ன கொடுமை!!

இவையெல்லாம் பிராமணர்களோடு மட்டும் போவதில்லையே. மற்ற ஜாதியார்களும் இவர்களைப் பார்த்து, சிறு வயதிற் கல்யாணம் செய்விப்பது தான் அழகு என்று கருதி, இக்கொடிய வழக்கத்தைப் பின் பற்றுகிறார்கள். பால்ய விவாகத்தின் கேடுகள் இவ்வளவாயின. தக்க வயது வந்தவுடன் செய்யும் விவாகத்தினால் வரும் நன்மைகளைப் பார்ப்போம்.

முதலாவது கல்யாணத்திற்குத் தயாராயுள்ள பிள்ளை வீட்டார்களின் கர்வம் ஒழியும். வரசுல்கம் வாங்கும் கெட்ட வழக்கம் நின்று

போம். பல வரன்களை நிதானித்துப் பாராமல் முதலில் வருகிற வரனுக்கு முத்துப்போலுள்ள குழந்தையைக் கொடுத்து துக்கத்திற்குள்ளாக்க வேண்டாம் இப்போது பத்துலக்ஷக் கணக்காயுள்ள பால்ய விதவைகளின் சங்கை குறையும். அதனால் விதவா விவாஹத்தின் அவசியமும் குறையும். சரீரம் திடகாத்திரமாய் வளர்வதற்கும், புத்தி விசாலமடைவதற்கும் இடமுண்டு. பிரஸவத்தினால் நேரும் மரணங்களும், குழந்தைகளுக்குள் வியாதியும் பல ஹீனமும் குறையும். இவ்வெல்லாக் காரணங்களாலும் விவாஹ வயதை உயர்த்துவது நல்லதேயாம், சாஸ்திரத்திற்கும் ஒத்தது; நிஜமான சுகத்திற்கும் காரணம்.

பெண்களின் விவாஹ வயதைப் பதினாறாகவும், பையன்களின் விவாஹ வயதையும் அதற்குத் தக்கபடியும் அதிகரித்துக் கொண்டாலொழிய, நமது ஸ்திரீகளுக்கும் கல்வி கற்பித்து, உலக யாத்திரையில் புருஷர்களுக்கு உற்ற துணைவர்களாயிருக்கும்படி பயிற்றுவித்தாலொழிய, நம் தேசம் செழிக்காது என்பதே என் நிச்சய அபிப்பிராயம். புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளுமாறு கல்விமான்களை ஏராளமாய் ஜப்பான், சீனா, இங்கிலாந்து முதலிய விடங்கட்கனுப்பிய போதிலும் ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்தாதவரை தேசம் முன்னுக்கு வரமுடியாது. இதற்கு ஆரம்பமாக விவாக வயதை உயர்த்தி வைத்துக்கொள்ளவேண்டியது பரம அவசியம்.

இவ்விதம் அதிகப்படுத்துவதால், கல்யாணம் ஆகாமலேயிருந்தாலும் இருந்துவிடலாமல்லவா என்று சில சமயங்களில் ஆக்ஷேபம் வரலாம். இப்படி நேருமென்று நான் நினைக்கவில்லை, அப்படியே இருந்தாலும் உபயோகமற்ற ஒருவனுக்கு மணம் செய்விப்பதைக் காட்டிலும் கார்கியைப் போல் விவாஹமின்றியிருப்பது எவ்வளவோ உத்தமம்.

ஓர் ஜனசமூஹத்தில் ஸ்திரீகளும் அவர்கட்குரிய அந்தஸ்தைப் பெறுமாறு அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்பது நமக்குப்புதிதல்ல. புராணங்களையும் சாஸ்திரங்களையும் ஆழ்ந்து பார்ப்பீர்களானால், உலகவாழ்க்கையில் ஸ்திரீகளும் புருஷர்களைப் போலவே தம் தம் தருமத்தைக் கொண்டு செலுத்தப் பழக்கம் பெற்றிருந்தனர். மஹம்மதியர்கள் படையெடுத்த காலந்தொடங்கியே, அதாவது சென்ற 1000 வருஷங்களுக்குள் தான் பழையநிலை

மாறி ஸ்திரீகளின் நிலை இழிவையடைந்தது. இப்போது நாகரீகமான இந்த பிரிட்டிஷ் அரசாட்சியில் மறுபடியும் அவர்கள் நிலைமையை பூர்வகாலங்களிலிருந்தபடியே செய்யச் சாத்தியமாயிருக்கிறது. காலசக்கரத்தில் பழையது புதிதாவதும் புதியது பழையதாவதும் இயற்கைதானே. அத்தகைய சமயம் நமக்கிப்போது வாய்த்திருக்கிறது.

ஸபையிலுள்ள ஸ்திரீகளை மட்டும் பார்த்துப் பின்வருமாறு கூறினர். பெண்களின் விவாஹவயதை உயர்த்தப் புருஷர்கள் ஆக்ஷேபியார்களென்பது நிச்சயம் என் ஸஹோதரிகளே, இளம்பிராயத்தில் நமது பெண்களுக்கு மணமுடிக்கமாட்டோமென்று உறுதிகொள்ளவேண்டியவர்கள் நாமேயாம். நல்லதாயிருப்பினும் நமது வழக்கத்திலில்லாத ஓர் சீர்திருத்தத்தைச் செய்வோமானால் முதலில் ஜனங்கள் எப்போதும் ஆக்ஷேபித்தல் வழக்கந்தான். காலக்கிரமத்தில் அதன் நலன்களை உணரவே, சாந்தமாயேற்றுக்கொண்டு அத்தகைய சீர்திருத்தம் செய்தவரைப் புகழவும் செய்வார்கள். அதற்கு இங்கோர் உதாரணம் சொல்கிறேன். உடன் கட்டையேறும் ஸதி என்னும் கொடிய வழக்கத்தை ராஜாராம் மோஹனராய் அவர்கள் நிறுத்த யத்தனித்த போது அவருக்கு ஒருவரும் ஸஹாயமாய் நிற்கவில்லை. அவர் பந்துக்களே அவரை நாஸ்திகனென்று நிந்தித்தார்கள். ஆயினும் தம் காரியத்தை ஸாதித்து முடித்தார். அது எவ்வளவு பெரிய பரோபகாரமென்று நாம் இப்போதுணருகிறோம். அவர் பிரயத்தினத்தினாலல்லவா தகப்பனையிழந்த குழந்தைகட்குத் தாயாராவது உயிரோடிருந்து பாதுகாக்கும்படி நேர்ந்தது?

நான் சொன்னபடி நற்காரியங்களிற் புகுவோர் ஒருவரையும் முதன்முதலே எல்லோரும் பூஷிப்பார்கள் என்றெண்ணுவது கூடாது. ஆயினும் காலாந்தரத்தில நன்மையே வெற்றிபெறும்.

பால்யவிவாஹத்தின் பெருந்தீமைகளையும் தக்கவயதில் செய்யும் விவாஹத்தின் நன்மைகளையும் இவ்விடம் வந்து தீரயோசித்த நீங்கள் நம்மவர் விவாஹ வயதை உயர்த்த நான் பிரேரணை செய்யும் இத்தீர்மானத்தை மநப்பூர்வமாய் அங்கீகரிப்பீர்களென்று நம்புகிறேன்.

இத்தீர்மானம் ஸ்ரீமதி வெங்கிடசுப்பம்மாள் அவர்களால் ஆமோதிக்கப்பட்டும் ஸ்ரீமான் என். வெங்கடேச ஐயங்காரவர்களால் ஆதரிக்க பெற்றும் நிராக்ஷேபமாய் நிறைவேறியது.

திருவண்ணாமலைச் செந்தமிழ்ச் சங்கம்.

நடு நாட்டிலுள்ள சிறந்த க்ஷேத்திரமாகிய இந்நகரில் 'சத்தி விலாச சன்மார்க்க சபை,' 'ரமணாநந்த நிலயம்,' 'செந்தமிழ்ச் சங்கம்' என மூன்று சபைகள் கல்வி யபிவிருத்தியின் பொருட்டு நடைபெற்று வருகின்றன. அவற்றுள் இரண்டு சபைகள் அருணாசலேசுவரருடைய திருக்கோயிலிலேயே அமைந்திருப்பதும், ஆங்கு புத்தகசாலைகளும் ஏற்பாடாகி யிருப்பதும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. பூர்வ காலங்களில் திருக்கோயில்களில் சங்கங்களும், பள்ளிக்கூடங்களும், நடைபெற்றமை இது ஞாபகப் படுத்துகின்றது. மதுரைத் தமிழ்ச் சங்கமும் சொக்கநாதர் கோயிலில் நடைபெற்றதாக அறிகிறோம் அன்றோ? பள்ளிக்கூடம் என்னும் பெயரின் வரலாற்றை உணர்வாமாகில் முற்காலத்தே கோயில்களில் வித்தை போதிக்கப்பட்டமை வெளிவாகும். முற்குறித்த மூன்று சபைகளில் 'செந்தமிழ்ச் சங்கத்தின்' முதல் வருடோற்சவம் சென்னை, ராவ்சாகேப் டி. இராமகிருஷ்ணபிள்ளை யவர்களின் அக்கிராசனத்துடன், நகரத்தார் அன்ன சத்திர மேல் மாடியில் மேமீ 13, 14-ம் தெய்திகளில் சிறப்பாக நடைபெற்றது. ஊரிலுள்ள பெரியோர்கள் பலரும் வந்திருந்தனர்.

உபந்நியாசங்கள்:—

ஸ்ரீமத் M. V கோவிந்தராஜையங்காரவர்களால் "கம்பரும் வான்மீகரும்," "கம்பரின் ஞாபக சக்தி" என்ற விஷயங்களும், ஸ்ரீமான் ப. பாலசுந்தர நாயனார் அவர்களால் "சண்டேசர் சரிதம்" என்ற விஷயமும், ஸ்ரீமத் P. K ஸ்ரீநிவாசாசார்யர் அவர்களால் "தமிழிலக்கிய ஆராய்ச்சி" யென்பதும், ஸ்ரீமான் சுந்தரநாதம் பிள்ளையவர்களால் "கருணை" என்பதும், என்னால் "திருவள்ளுவர்" என்ற விஷயமும் உபந்நியசிக்கப்பட்டன. உபந்நியாசகர் ஒவ்வொருவரும் தாம் எடுத்துக்கொண்ட விஷயங்களை சபையோர் மகிழுமாறு அழகுபட உபந்நியசித்தார்கள். அவைகளில் யான் குறிப்பு எடுத்துக் கொள்ளாமையால் விஷயச் சுருக்கம் எழுதக் கூடவில்லை. ஸ்ரீமத் கோவிந்தராஜையங்காரவர்கள், இராம சரித்திரத்தைப் பாடிய வான்மீகரும், கம்பரும் தெய்வப் புலமை வாய்ந்த மகா கவிகளே யென்றும், அவர்களில் கம்பர் காலதேசங்களுக் கேற்றபடியும், கதாநாயகர்களின் மேல் வைத்துள்ள பக்தி மிகுதியாலும் ஓரோவிடங்களில் கதைகளையும் சாதுரியமாக மாற்றிவிடுவரென்றும், வான்மீகியின் கருத்துக்களை யெடுத்துக்கொண்ட விடத்தும் அவற்றை விஸ்தரித்து அழகு படுத்துவரென்றும், மரியாதை விஷயத்தில் வால்மீகியினும் மேம்பட்டிருக்கிறாரென்றும் அநேக திருஷ்டாந்தங்களினால் அழகாக விளக்கிக் காட்டினார்கள்.

என் உபந்நியாசத்தில் ஒன்றிரண்டு இங்கு குறிப்பிடுகின்றேன். திருவள்ளுவர் ஏறக்குறைய 1800 வருஷங்களுக்குமுன் அவதரித்தவர். அவரியற்றிய திருக்குறளின் பெருமையால் உலகிலுள்ள பல மதஸ்தர்களும் அவரைத் தம தம் மதத்தினர் எனக் கூறுகிறார்கள். தத்தம் பாஷைகளில் திருக்குறளை மொழிபெயர்த்தும் படித்

கிறார்கள். ஆனால் திருவள்ளுவர் சமய வாதிகளின் போக்கைப் பின் பற்றியவரல்லர். எச்சாதியாரும், எச்சமயத்தவரும் படித்துப் பயனடைய வேண்டுமென்றே உறுதிப் பொருள்களைப் பொதுவே கூறியிருக்கிறார். அன்றியும், கால தேசங்களாற் பாதிக்கப்படாது எக்காலத் தெவ்வெவரும் கைக்கொள்ளத் தகுந்த நூல் திருக்குறள் ஆகும். வள்ளுவனார் தேச க்ஷேமத்தில் எவ்வளவு கருத்துடையரென்பதனை அவர் கூறியிருக்கும் "நாடு" என்ற ஓர் அதிகாரத்தைப் படித்தவளவிலும் அறிந்து கொள்ளலாம். "பல் குழுவும் பாழ் செய்யுமுட் பகையும் வேந்தலைக்கும் கொல் குறும்பு மில்லது நாடு" என்கிறார். இப்பாட்டிலுள்ள 'பல் குழு' என்பதற்கு, 'சாதி பற்றியும் சமயம் பற்றியும் தம்முள் மாறுபட்டுக் கூடும் பல கூட்டம்' என்பது பொருளாகும். அது நாட்டிற்கு ஓர் குறையாகக் கூறப்பட்டது. நான்கு புருஷார்த்தமும் வள்ளுவரால் மூன்று பாலில் அடக்கிக் கூறப்பட்டுளது. இந்நூல் தோன்றிய காலத்திற்றானே எல்லாராலும் மேற்கொள்ளத் தகுந்த பிரமாண நூலாகி விட்டதே இதன் பெருமைக்குச் சான்றாம். உலகிலுள்ள அறிவுடையா ரெவரும் இதுவரை திருக்குறளிலுள்ள எந்த வாக்கியத்தையும் நிராகரித்துப் பேசினதில்லை.'

இச்சங்கத்தின் காரியதரிசிகள், 'அடுத்த வருஷங்களில் இக் கூட்டம் பின்னும் பல வழியிலும் சிறப்படையுமாறு நடத்த முயலுவோம்' எனக் கூறியுள்ளார்கள்.

நடுக்காவேரி மு. வெங்கடசாமி நாட்டார்.

சமாசாரம்.

இந்தியாவில் உண்டாக்கப்படும் ஆகாரம், குடும்ப நிர்வாகத்துக்கு வேண்டிய மற்ற சாமான்கள் விஷயமாய்ப் பம்பாயில் பொருட்காட்சி

யுத்தத்தின் பலனாய் நேரிட்டிருக்கிற கப்பல் சுருக்கத்தினால் இங்கிலாந்திலிருந்து வேண்டிய சாமான்கள் வரத்தில்லை. ஆகையால் இந்தியாவில் இருக்கும் இந்தியர்களும், ஐரோப்பியரும், ஆங்கில இந்தியரும், இங்கிலாந்திலிருந்து வந்து கொண்டிருந்த சாமான்களுக்குப் பதிலாக இந்தியாவிலேயே உண்டாக்கப்படும் சுதேசிய சாமான்களை உபயோகிக்கவேண்டி வருகிறது. ஆனால் அவைகளின்னின்னவை யென்று தெரியாமல் சிரமப்படுகிறார்கள். ஆகையால் ஒரு பொருட்காட்சி ஏற்படுத்தினால், இந்தியாவில் உண்டாக்கப்படும் மேற் கண்ட சரக்குகளை யெல்லாம், எல்லாருடைய பார்வைக்கும் கொண்டு வரலாம். ஆகையால் கூடிய சீக்கிரத்தில் பம்பாயில் ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்யப்போகிறார்கள். மாட்சிமை தங்கிய ராஜப்பிரதிநிதி, பம்பாய் கவர்னர் அவர்கள் ஆமோதிப்பின்பேரில் பம்பாய் கவர்னர் பெருமாட்டி லேடி வில்லிங்டன் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் இக்காக்ஷி நிகழும். யுத்த விஷயமாய் உழைத்து வரும் பம்பாய் ராஜதானியின் ஸ்திரீகள் கிளைச் சபையால் இக் காட்சி ஏற்பாடு செய்யப்படுகிறது. இது ஏற்படுவது மிகவும் சிலாக்கியம். இதை சகல வியாபாரிகளும், கனவான்களும், சரக்குகளை உண்டாக்குவோரும், ஆதரிப்பார்களாக.

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும் ரோமத்தில் பூசுவதனால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.
ஏஜெண்டுகள் தேவை.

3 கேக் உள்ள பெட்டி 1-க்கு 0—14—0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1—10—0
தபால் செலவு பிரத்தியேகம்.

தலைமயிர் நரைத்து கிழவர்களைப்போல் ஏன் காணப்படுகிறீர்கள்!

எங்கள் தர்பார் கேச கலாப்பை

ஒரு தடவை உபயோகிப்பதினால், பித்தத்தினாலோ அல்லது வயதினாலோ மயிர் நரைத்து விடுகிறதைத் தடுத்து பழைய கருப்பு நிறத்துக்கே திருப்பிவிடுகிறது. மற்ற தைலங்களோ வெகுநாள் விடாது தடவி வந்தால்தான் குணம் தோன்றும். இத்தைலத்தையோ 5 நிமிஷம் உபயோகித்தால் முழுக்கருப்பாகிவிடும். நல்ல வாசனையும் வீசும். கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும் கொடுக்கும். ஒரு தடவை வாங்கினால் உண்மை தெரியவரும்.

புட்டி, புருஷ் உடன் ரூபாய் 1—0—0
போஸ்டேஜ் 0—4—0

விலாசம்

வைரம் அண்டு கம்பெனி
8. இருளப்பன் தெரு மதராஸ்.

எங்களைப்பற்றி

என்ன சொல்லுகிறார்கள்?

ஆந்திரா, இந்த ஔஷதாலயம் இந்தியாவில் மிகப்பெரிதென்றே சொல்லவேண்டும்.

திராவிடாபிமானி, இவர்களின் அபிவிர்த்திக்கு மருந்துகளின் சற்குணமே காரணம்.

பெண்கல்வி, அவர்களுடைய பொதுமையேதான் வியாபாரத்தை அதிகப்படுத்துகிறது. இப்பொழுது உலகெலாம் பரவுகிறது

ஞானபானு, இந்த ஔஷதாலயம், "பொதுமையுடையார் பூமியாள்வார்" என்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.

கலைமகள், இவர்கள் வியாபாரத்தைக் கவனிக்கும்போது அளவற்ற அற்புதமான மருந்துகள் வைத்திருக்கிறதாய் விளங்குகிறது அவர்களின் பிரசித்திக்கு மருந்தின் குணந்தான் காரணம் என்று திட்டமாய்ச் சொல்லுகிறோம்.

இவ்விதமாகவும் இன்னும் அதிகமாகவும் இந்தியாவிலுள்ள சுமார் 212 பத்திரிகைகள் புகழ்கின்றன. யாரைப்பற்றியென்று நினைக்கிறீர்கள்?

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தைப் பற்றியேதான்.

விபரமான கியாட்லாக்கை விரும்புவோர் விலாசத்தைத் தெரிவித்தால் இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

45, மேலக்கோபுரவீதி, மதுரை.